பக்கங்கள்:-33

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | தை 27 | செவ்வாய்க்கிழமை | 10.02.2026 | அதிர்வு 194

## கோட்டாபயவுக்கு சி.ஐ.டி. அழைப்பு



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தில்

06



# ரில்வினுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கும்



## மாகாண சபைத் தேர்தல் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை

“மாகாண சபைத் தேர்தலை அநுர அரசு நடத்தும் என எதிர்பார்க்கின்றோம். அதற்கான அழுத்தத்தை ரில்வின் சில்வா உள்ளிட்டவர்களுக்கு இந்தியா கொடுக்கும் என நம்புகின்றோம்.”

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

06

# மாகாண சபைத் தேர்தல் தாமதத்துக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளும் காரணம்

## முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ பகிரங்கக் குற்றச்சாட்டு



“தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் மாகாண சபைத் தேர்தல் விவகாரத்தில் அதிகளவு குரல் கொடுப்பதை நான் அவதானிக்கவில்லை. மாகாண சபைத் தேர்தல் தாமதத்துக்கு அந்தக் கட்சிகளும் ஒரு காரணமாகும். எவ்வாறாயினும், அரசு மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்.”

– இவ்வாறு முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தாமதமடைந்து வருகின்றமை தொடர்பாக ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த அரசுக்குத் தற்போது மக்கள் ஆதரவு தொடர்பான புரிதல்

06




ஆளுநர்கள் என்றாலே அரசாங்கத்தின் கைப் பொம்மைகள்தான் –ஜனாதிபதியின் ஏவலர்கள்தான் – என்பது நமக்கு தெரிந்ததே. இந்த ‘ஏவலர்கள்’ சில சமயங்களில் ‘ஏவல் நாய்கள்’ ஆகி விடுவதும் உண்டு.

அடங்கிப் போகும் சேவகர்களைத்தான் எஜமான ஜனாதிபதி எப்போதும் விரும்புவார். ஆகையினால் தனித்துவமும் தற்றுணிவும் கொண்டவர்கள் பெரும்பாலும் இப்பதவியைப் பொறுப்பேற்பதில்லை. பொறுப்பேற்றாலும் அதில் நின்று பிடிப்பதில்லை.

ஆயினும், யாழ் மாவட்ட அரசு அதிபராக துணிச்சலுடனும் தனித்துவத்துடனும் நிர்வாகத் திறமையுடனும் மடங்காமலும் கடமையாற்றிய ஒருவர் வடக்கு மாகாண ஆளுநராக வந்த போது அந்தத் தனித்துவம் அவரின் மாகாண நிர்வாகத்திலும் மிளிரும் என்றுதான் எதிர்பார்த்தோம். ஆனால் அவையெல்லாம் இப்போது காணாமல் போய் கானல் நீராகிவிட்டன. கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைமையாகி விட்டது.

06





# ஜனாதிபதியின் விசேட கவனத்தில் வடக்கு - கிழக்கு: துரித அபிவிருத்திக்காகத் தனியான நிதி ஒதுக்கீடு!

## முன்மொழிவுகளை உடன் தயாரிக்குமாறு ஆளுநர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் விசேட பணிப்புரைக்கு அமைவாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் துரித அபிவிருத்திக்கெனத் தனியான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவுள்ளது. இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், மாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்மொழிவுகளை உடனடியாகத் தயாரிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில், மாகாண உயர் அதிகாரிகளுடன் நேற்று திங்கட்கிழமை மாலை நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலேயே ஆளுநர் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் மாகாண பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் மாகாணப் பணிப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர் மேலும் கூறியதாவது:–

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் தனிக்கவனம் செலுத்தியுள்ளார். இதன் அடிப்படையில் இரு மாகாணங்களிலும் விசேட அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக நிதியை ஒதுக்கீடு செய்ய அரசு தீர்மானித்துள்ளது. இந்த அரிய வாய்ப்பை எமது மாகாணத்தின் வளர்ச்சிக்காக நாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாண சபையால் ஏற்கனவே 32 மிகப் பெரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுத் தயார் நிலையில் உள்ளன. இத்திட்டங்களைத் தற்போதைய சூழல் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப மீள் பரிசீலனை செய்து, உடனடியாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிய திட்டங்களை வடிவமைக்கும் போதும், இருக்கும் திட்டங்களை மீளாய்வு செய்யும் போதும் சில விடயங்களில் அதிகாரிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

திட்டங்கள் மாகாணத்தின் பொருளாதாரத்தை உயர்த்தக் கூடியதாக இருக்க வேண்டும். எமது மாகாண இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களாக அவை அமைய வேண்டும். மாகாணத்தில் இதுவரை பயன்படுத்தப்படாமல் இருக்கும் இயற்கை மற்றும் ஏனைய வளங்களைப் பயனுள்ள வகையில் கையாளக் கூடியதாக இருக்க வேண்டும். மாவட்ட ரீதியாக மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

வெறுமனே கட்டடங்களைக் கட்டுவதை விட, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நீண்டகாலத் திட்டங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.” – என்றார்.















# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் மிகவும் கொடூரமானது புதிய சட்ட வரைவு

## திரைமறைவுத் திட்டத்தை அம்பலப்படுத்தும் சுமந்திரன்



"பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் எனும் பெயரிலான புதிய சட்ட வரைவு ஒன்றை அநுர அரசு முன்மொழிந்திருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் போராட்டங்கள் மூலம் பதவியிறக்கப்பட்ட போது, போராட்டக்காரர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத் தப்படவில்லை. ஆனால், எதிர்காலத் தில் மீண்டும் அத்தகைய மக்கள் எழுச் சிகள் உருவாகாமல் தடுப்பதையே நோக் கமாகக் கொண்டு, பழைய சட்டத்தை விட வும் மிக மோசமான சரத்துக்களுடன் இந்தப் புதிய சட்டம் கொண்டு வரப்படுகின் றது."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் ஜனாதி பதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந் திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"1979 ஆம் ஆண்டு கொண்டு வரப் பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது வெறும் 6 மாத காலத்துக்காக உருவாக் கப்பட்ட ஒரு தற்காலிக ஏற்பாடாகும். ஆனால், 1982 இல் அது ஒரு நிரந்தரச் சட்டமாக மாற்றப்பட்டது.

ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் உள்ளிட்ட இயக்கங்களைத் தடை செய் யக் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம், போர் முடிந்த பின்னரும் நீக்கப்பட வில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெறுவதற்குப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாக உள்ளது.

இதன் காரணமாகவே அரசு பழைய சட்டத்தை நீக்கிவிட்டு புதிய சட்டத்தைக் கொண்டு வர முயல்கின்றது.

ஆனால், இந்தப் புதிய வரைவு பழைய சட்டத்தை விடப் பல மடங்கு கொடூரமானது.

புதிய சட்ட வரைவு மிகவும் மோசமாக இருப்பதால், மக்கள் அனைவரும் அதனை எதிர்த்துப் போராடுவார்கள். அந்த எதிர்ப்பின் விளைவாக அரசு புதிய வரைவை வாபஸ் பெற்றால், தானாகவே பழைய "பயங்கரவாதத் தடைச் சட்டம்" நடைமுறையில் நீடிக்கும்.

பழைய சட்டத்தைத் தந்திரமாகத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே அரசு இவ்வளவு மோசமான புதிய வரைவை முன்மொழிந்துள்ளதோ என்ற பலமான சந்தேகம் எழுகின்றது." – என்றார்.

# பதுளையில் விவசாயி ஒருவர் கொடூரமாக வெட்டிக்கொலை

## சொந்த விவசாய நிலத்திலேயே பறிபோன உயிர்




விவசாயி ஒருவர் வெட்டிப் படு கொலைசெய்யப்பட்டுள்ளார்என்றுபொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பயங்கர சம்பவம் பதுளை மாவட்டம், ஹப்புத்தளை பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட பிடபொல பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான நபர் பொரலந்த வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் பிடபொல பகுதியைச் சேர்ந்த 65 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவருக்குச் சொந்தமான விவ சாய நிலத்தில் இந்தக் கொலை இடம் பெற்றுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கொலைக்கான காரணமும் சந்தேக நபர்களின் அடையாளமும் இன்னும் வெளியாகவில்லை என்றும் பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஹப்புத் தளை பொலிஸார் தீவிர விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய அரசமைப்பு வெறும் கனவாம்!

## இப்படி அரசைச் சாடுகின்றார் விஜயதாஸ



தற்போதைய அரசின் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாகாது என்றும், அது வெறும் கனவு மட்டுமே என்றும் முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசு புதிய அரசமைப்பை உருவாக்கும் என்றும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என்றும் அக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தேசிய மக்கள் சக்தி அரசு அதிகாரத்துக்கு வந்து நான்கு மாதங்கள் கடந்துள்ள போதிலும், இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை குறித்து அரசியல் தரப்பில் விவாதங்கள் எழுந்துள்ளன.

இதுதொடர்பில் முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

“தற்போதைய அரசின் ஆட்சிக் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாகும் என்பது வெறும் கனவு மட்டுமேயாகும். தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் கடந்தும், இன்னும் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளைக் கூட எடுக்காமல் இருக்கின்றது.

அரசு முதலில் புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டுமானால், அதற்கான ஆரம்பகட்ட பணிகளைத் தொடங்க வேண்டும். ஆனால், இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவில்லை.

இப்படியான அரசு புதிய அரசமைப்பைக் கொண்டு வரும் என்று எப்படி நம்ப முடியும்? அதனால்தான் இது வெறும் கனவு என்று நான் கூறுகின்றேன்.” – என்றார்.

# பொலிஸாரின் கட்டளையை மீறிப் பாய்ந்த லொறி மீது துரத்தித் துரத்தித் துப்பாக்கிச்சூடு

## முறியடிக்கப்பட்ட மாட்டுக் கடத்தல் போதைப்பொருளுடன் இருவர் கைது



பொலிஸாரின் உத்தரவை மீறிச் சென்ற லொறி மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அந்ததொல பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

அம்பலாங்கொடை நோக்கி சென்ற லொறியொன்றைச் சோதனைக்காகப் பொலிஸார் நிறுத்துமாறு சைகை செய்தபோது, நிற்காமல், பொலிஸாரின் உத்தரவை மீறி, அந்த லொறி சென்றுள்ளது.

இதையடுத்து பொலிஸ் அதிகாரிகள் லொறியைத் துரத்திச் சென்று நிறுத்த முற்பட்டபோது, லொறி தொடர்ந்து செல்லவும், துப்பாக்கிச்சூடு நடத்தியதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அந்த லொறியைச் சோதனையிட்டபோது, 10 பசுக்கள் மற்றும் 4 எருமை மாடுகள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று தலை துண்டிக்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து, லொறியில் இருந்த இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து 5ஆயிரத்து 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் 42 மற்றும் 46 வயதுடையவர்கள் எனவும், அக்குரஸ்ஸ மற்றும் பேருவளை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

லொறியின் சாரதி மற்றும் மற்றொரு சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவர்களைக் கைது செய்ய அம்பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கு, கிழக்கு தமிழரிடம் உண்மையிலேயே செல்வாக்கு இருந்தால் தேர்தலை நடத்துங்கள்!

## அநுர அரசுக்கு நாமல் பகிரங்க சவால்




"வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் தமக்கு நல்லதொரு செல்வாக்கு, ஆதரவு உள்ளது என்று அநுர அரசு குறிப்பிடுகின்றது. அவ்வாறாயின் இந்த அரசு உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் தேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இனவாதம் பரப்பவில்லை என்று குறிப்பிட்டுக்கொண்டு அரசு மறைமுகமாக இனவாதக் கருத்துக்களைப் பரப்பிவிடுகின்றது. நாங்கள் ஒருபோதும் இனவாதமாகச் செயற்படவில்லை. தேசியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பிடுவது இனவாதமாக அமையாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், தமிழ் மக்கள் மத்தியிலும் தமக்கு நல்லதொரு நிலைப்பாடு இருப்பதாக அரசு குறிப்பிடுகின்றது. அவ்வாறாயின் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தி தமிழ் மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கை அரசு பரிசீலிக்க வேண்டும்.

ஆட்சிக்கு வந்தவுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் ஒரு வருடம் கடந்துள்ள நிலையில் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தலைப் பழைய தேர்தல் முறைமையில் நடத்துவதா அல்லது புதிய தேர்தல் முறைமையில் நடத்துவதா என்பதை ஆராய்ந்து யோசனைகளை முன்வைப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை முன்வைக்கும் யோசனை அண்மையில் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தெரிவுக்குழுவுக்கு எதிர்க்கட்சியில் இருந்து பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஆனால் ஆளும் தரப்பில் இருந்து இதுவரையில் பெயர்கள் பரிந்துரைக்கப்படவில்லை. மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் நோக்கம் இந்த அரசுக்குக் கிடையாது என்பதையே இது வெளிப்படுத்துகின்றது."

– என்றார்.

# லொறி மோதி சிறுவன் பரிதாபச் சாவு!



லொறி மோதி 13 வயது சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் இரத்தினபுரி மாவட்டம், உடவளவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடவளவை – தனமல்வில வீதியின் மலபொட்டுஆர பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பேரியல் சந்தியிலிருந்து தனமல்வில நோக்கிப் பயணித்த லொறி ஒன்று, வீதியோரத்தில் நடந்து சென்ற சிறுவன் மீது மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுவன், உடவளவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் உடவளவை பகுதியைச் சேர்ந்த 13 வயதுடைய சிறுவன் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உடவளவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இரத்தினபுரி, எலபத்த பொலிஸ் பிரிவின் கனதொல – இலுக்தென்ன வீதியில் உள்ள 79 ஆம் இலக்க இறப்பர் தோட்டத்துக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை லொறி மோதி 11 மாணவி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபை தேர்தல்களை நடத்தாமல் அதிகார வர்க்கம் இழுத்தடிப்பது தங்களின் கட்டுப்பாட்டில் - தங்கள் விருப்பப்படி - மாகாண நிர்வாகங்களை நடத்த வேண்டும்என்பதற்குத்தான்.அந்தவேலையைச் செய்வதற்கான ஏவலர்களாக ஆளுநர்கள் மாறிவிட்டார்கள். அதிலும் வடக்கு ஆளுநரின் நிலைமையோ சொல்லத் தேவையில்லை.

'எப்படி இருந்த மனிதர் இப்படி ஆகிவிட்டாரே...!' என்று வேதனைப்படுவதைத் தவிர நமக்கு வேறு வழி இல்லை.

வடக்கு மாகாண நிர்வாகம் என்பது ஆளும் கட்சித் தரப்பின் விருப்பத்துக்கு வளைந்து கொடுக்கும் ஆளுநரின் செயற்பாடு என்றாகிவிட்டது.

மாகாண ஆளுநரின் நேரடி நியமனத்தின் கீழ் உள்ள ஐந்து பதவிகளில் மூன்று பதவிகளில் அமர்ந்தவர்கள் தற்போதைய ஆளுநரால் நியமிக்கப்பட்டவர்களே. பின்னர் அவர்கள் பதவி நீக்கப்பட்டு புதியவர்கள் இப்போது நியமிக்கப்பட்டு விட்டனர்.

இந்தப் பதவி நீக்கத்துக்கு அவர் (ஆளுநர்) பக்கத்தில் இருந்து கூறப்படும் காரணம் 'அவை மாற்றச் சொல்லி நிற்கினம்...' என்பது மட்டும்தான்.

இவற்றைத் தாண்டி மாகாண சபையின் நிர்வாகத்தை அப்படியே மத்திய அரசின் அரசியல்வாதிகளுக்கு தாரை வார்த்துக் கொடுக்கும் வேலையை தற்போதைய ஆளுநர் முன்னின்று செய்கிறார் என அதிகாரிகள் மட்டத்தில் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள 5 அமைச்சுக்களிற்கும் வடக்கில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் ஆளுநரால் உத்தியோகபற்றற்ற வழிநடத்துநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆளுநரின் செயலாளர் ஒப்பமிட்டு இந்த ஐந்து எம்.பிக்களுக்கும் வழங்கப்பட்டுள்ள கடிதத்தில் 2026 ஆம் ஆண்டிற்கான திட்ட ஆராய்வு கூட்டங்களில் அந்த எம்.பிக்கள் பங்குகொள்ளலாம் என்று மட்டும்தான் கூறப்பட்டுள்ளது.

ஆனால் உண்மையில் மாகாண சபையின் கீழ் இருக்கும் ஐந்து அமைச்சுக்களும் ஆளும் தரப்பின் இந்த ஐந்து எம்.பிக்களுக்கு பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளன என்பதுதான் நிலைமை. ஏற்கனவே அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுகளில் தத்தமது கைவரிசைகளைக் காட்டத் தொடங்கி விட்டனர் என்பது அதிகாரிகள் மட்டத்திலிருந்து முணு-முணுப்பாக கசியத் தொடங்கி விட்டது.

இந்த நியமனத்திற்கு அமைய உள்ளூராட்சி அமைச்சிற்கு - இளங்குமரன். சுகாதாரம் - மருத்துவர் சிறிபவானந்தராஜாவுக்கு. சிறுவர்,மகளிர் விவகாரம் - ஜெயச்சந்திரமூர்த்திக்கு.

இதேபோன்று கல்வி அமச்சிற்கு ஜெகதீஸ்வரன். விவசாய அமைச்சிற்கு திலகநாதன்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை இல்லாதமை காரணமாக மாகாண நிர்வாகம் ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றது. இதுதான் தற்போதைய சட்டரீதியான நிலைமை.

மக்களால்தெரிவுசெய்யப்பட்டமாகாண முதலமைச்சர் உட்பட மாகாணங்களில் ஐந்து அமைச்சர்களும் ஆற்ற வேண்டிய பணியை இப்போது ஆளுநர் தமது கண்காணிப்பில் முன்னெடுக்க வேண்டும்.

அதை அவர் செய்யாமல், வடக்கு மாகாணத்தில் இருந்து நாடாளுமன்றுக்கு ஆளும் தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து எம்பிக்களுக்கு பகிர்ந்து அளித்திருக்கிறார் அவர். அதுவும் சட்ட ரீதியாக அல்ல, மாறாக திட்ட ஆராய்வுக் கூட்டங்களில் அந்த எம்பிக்கள் பங்குபற்றுவார்கள் என்ற மறைபொருளில்.

ஆனால், உண்மையில் ஐந்து மாகாணசபைஅமைச்சுக்களையும்கையாளும் அமைச்சர்கள் போல இந்த ஐவரும் செயல்படுவதற்கான அதிகாரம் எழுத்திலும் இல்லாமல், சட்ட ரீதியாகவும் இல்லாமல், இந்த ஐவரிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

அந்த நிலைமைக்கு ஆளும் தரப்பின் அழுத்தத்திற்கு விலை போய் இருக்கின்றார் வடக்கு ஆளுநர்.

நாடாளுமன்றின் ஐந்து எம்.பிக்களை வடக்கு மாகாண அமைச்சர்கள் போல செயல்படுவதற்கு இடம் அளித்து மாகாண சபை முறைமையையும் கொச்சைப்படுத்தி, ஒரு சிறந்த நிர்வாகி எனத் தமக்குக் கடந்த காலத்தில் இருந்த நற்பெயரையும் சின்னாபின்னமாக்கியிருக்கின்றார் வடக்கு ஆளுநர்.

அந்த ஆளும் தரப்பின் ஐந்து எம்.பிக்களுக்கும் ஆளுநர் மூலம் வழங்கப்பட்ட இந்த நியமனம் எத்தனை கூட்டத்திற்கு என்றோ அல்லது எவ்வளவு காலத்திற்கு என்றோ எழுதப்படவில்லை.

இந்த நடவடிக்கை மூலம் ஐந்து மாகாண அமைச்சுக்களும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவருக்குத் தாரை வார்க்கப்படுவதாகவே காணப்படுவதனால் இனியும் வடக்கு மாகாண சபையில் பணியாற்றுவது அடிமைக்கு ஒப்பானது என அதிகாரிகள் புலம்புகின்றனர்.

இலங்கையின ஏனைய மாகாணத்தில் இல்லாத இந்த ஒரு நடைமுறையை தற்போது வடக்கு ஆளுநர் புகுத்தியுள்ளமை ஏனைய மாகாணத்திற்கும் இந்த நோய் பரவுமா என்ற அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

---

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிடைத்துவிட்டது. அதனால்தான் அரச தரப்பினர் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருக்கின்றார்கள். தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்துப் பேசுகின்ற அரசு, மறுபுறம் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருக்கின்றது.

மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்துகின்ற தேர்தலை நடத்தாத அரசு, வடக்குக்குச் சென்று பெரும்பான்மை மக்களை விமர்சிக்கின்றது. மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்." - என்றார்.

மேலும்மாகாணசபைத்தேர்தல்குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகள் அதிகளவு குரல் கொடுப்பதில்லை என்றும் விஜயதாஸ ராஜபக்ஷ தமது விசனத்தை வெளிப்படுத்தினார்.

எனினும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன், சாணக்கியன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் மாகாண சபைத் தேர்தல்தொடர்பாகத்தொடர்ந்துகுரல்கொடுத்து வருகின்றார்களே என்று வினவியபோது, அவர் பதிலளிக்கையில்,

"தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் மாகாண சபைத் தேர்தல் விடயத்தில் அதிகளவு குரல் கொடுப்பதை நான் அவதானிக்கவில்லை. 2017ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் முறைமையை மாற்றியமைத்து, தேர்தல் தாமதமடைவதற்கு இந்தத் தமிழ்த் தேசியக் கட்சிகள் அன்று முழுமையான ஆதரவை வழங்கியதை நான் இங்கு சுட்டிக்காட்டுகின்றேன். தேர்தல் தாமதத்துக்கு அந்தக் கட்சிகளும் ஒரு காரணமாகும். எவ்வாறாயினும் இந்த அரசு மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்." - என்றார்.

---

## கோட்டாபயவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 13ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ஷவை விசாரணைக்கு வருமாறு சி.ஐ.டியினர் அழைத்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

கொழும்புக்கு அருகில் அமைந்துள்ள ஒரு வீட்டுத் தொகுதிக்குச் சொந்தமான பல வீடுகளைப் பல நபர்களுக்கு சட்டவிரோதமாக ஒதுக்கியதை அங்கீகரிக்கும் கடிதங்கள் வெளியிடப்பட்டமை குறித்து வாக்குமூலம் பெறவே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அதன்படி, இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதிக்குக் கடந்த வெள்ளிக்கிழமை எழுத்துபூர்வ அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது

---

## ரில்வினுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அநுர அரச தரப்பினர் பின்வாங்கி வருகின்றமை தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"மாகாண சபைத் தேர்தலை இந்த வருடம் நடத்துவதாகவே அநுர அரசு தெரிவித்திருந்தது. அத்துடன் வரவு - செலவு திட்டத்திலும் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதனால் மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்தும் என்ற நம்பிக்கையிலேயே நாங்கள் இருக்கின்றோம்.

எனினும், டித்வா புயல் அனர்த்தத்துடன் தற்போதைய நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அரசின் முயற்சி குறைந்துள்ளதாகவே தெரிகின்றது. ஆனால் தற்போது மக்கள் விடுதல முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட சிலர் இந்தியாவுக்குச் சென்றிருக்கின்றனர். மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியா ரில்வின் சில்வாவுக்கு ஓரளவு அழுத்தம் கொடுக்கும் என நினைக்கின்றோம். அதனால் மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் நாட்டின் உண்மைத்தன்மையை மக்களுக்குக் காட்ட முடியுமாகும்.

மேலும் மாகாண சபைத் தேர்தல் இடம்பெறுமாக இருந்தால், நாங்கள் கூட்டணி அமைத்தே போட்டியிடுவோம். எதிர்க்கட்சியில் இருக்கும் அனைத்து கட்சிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு பாலமாகவே இருக்கின்றது. அதனால் கூட்டணி அமைப்பது தொடர்பில் தற்போது நாங்கள் அனைவருடனும் கலந்துரையாடி வருகின்றோம்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கலந்துரையாடல் எமது கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன

07

## வாகன இறக்குமதியின் போது விதிக்கப்படும் 50 வீத மேலதிக வரியை நீடிப்பதற்குத் தீர்மானம்

வாகன இறக்குமதியின் போது விதிக்கப்படும் 50 சதவீத மேலதிக வரி நடைமுறையை, எதிர்வரும் 2026 டிசம்பர் 31 வரை நீடிப்பதற்கு நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல்களின் கீழ் இந்த வரி விதிக்கப்பட்டிருந்தது.

தற்போது அந்த நடைமுறை 2026 ஆம் ஆண்டு இறுதி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்த 50 சதவீத மேலதிக வரியானது பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட வாகனங்களுக்கு தொடர்ந்து விதிக்கப்படும்.

வெளிநாட்டு செலாவணியை முகாமைத்துவம் செய்யும் நோக்குடன் இந்த வரி விதிப்பு காலம் நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## ரில்வினுக்கு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையில் குழுவொன்றை ரணில் விக்கிரமசிங்க அமைத்திருக்கின்றார். அதேபோன்று ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாட என்னை நியமித்திருக்கின்றார். அதனால் நாங்கள் அனைத்து கட்சிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம். இறுதியில் சிறந்ததொரு எதிர்க்கட்சியை அமைப்பதை யாராலும் தடுக்க முடியாது.

அத்துடன் கூட்டணி அமைக்கும் விடயத்தில். எதிர்கால அரசியல் நடவடிக்கைகளைக் கருத்தில்கொண்டு நாங்கள் முதலாவதாக இணைந்து செயற்பட முயற்சிப்பது ஐக்கிய மக்கள் சக்தியுடனாகும். அதனைத் தொடர்ந்து ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்பட நாங்கள் தயாராக இருக்கின்றோம்.” - என்றார்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பிள்ளையார் கல்யாணம்

நாளை, நாளை என்று தள்ளிப் போவதை 'பிள்ளையார் கல்யாணம்' என்பார்கள். பிள்ளையாருக்கு கல்யாணம் நாளை, நாளை என்று கூறுவார்கள். ஒவ்வொரு நாளும் அடுத்த நாளை குறிப்பிட்டு கல்யாணம் தள்ளிப் போவதாக ஒரு ஐதீகக் கருத்து உண்டு.

அப்படி இலங்கையில் நாளை நடக்கும், நாளை நடக்கும் என்று தொடர்ந்து நடைபெறாமல் தள்ளிப் போகும் சில விடயங்கள் உண்டு.

யுத்த காலத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக, நீதி, நியாயமான விசாரணைகள் நடைபெற்று, உண்மைகள் கண்டறியப்பட்டு, குற்றம் இழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படும் என்பது இப்படி நாளை, நாளை என்று கூறி, தொடர்ந்து நடக்காமல் போகும் விடயங்களில் அடங்கும்.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்பதும் கடந்த 75 ஆண்டுகளாக இவ்வாறு தான் பிள்ளையார் கல்யாணம் போல தள்ளிப் போகின்றது.

அதே வகையறாவில் இப்போது மாகாண சபை தேர்தலும் சேர்ந்து விட்டது.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக அந்தத் தேர்தல் நடைபெறவில்லை. இந்தத் தேர்தல் விடயத்தில் விவகாரம் 'நாளை', 'நாளை' என்பதற்கு பதிலாக 'அடுத்த வருடம்', 'அடுத்த வருடம்' என்று தள்ளிப் போவது தான் நிலைமை.

இந்த அரசு பதவிக்கு வர முன்னர் மக்களுக்குக் கொடுத்த பிரதான வாக்குறுதிகளில் ஒன்று மாகாண சபைத் தேர்தலை ஒரு வருடத்துக்குள் நடத்தி முடிப்பதாகும்.

2024 இல் அதிகாரத்துக்கு வந்த அநுரகுமார திஸநாயக்கா அப்போது அடுத்த வருடத்தில் - அதாவது 2025 இல் - மாகாண சபைத் தேர்தல் என்று தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு நேரடியாக உரைத்தார்.

பின்னர் 2025 இல் நின்று கொண்டு அடுத்த வருடத்தில் - அதாவது 2026 இல் - அந்தத் தேர்தல் நடக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இப்போது 2026 இல் வந்து நின்று கொண்டு, இந்த வருடமும் தேர்தல் இல்லை, அடுத்த வருடம் தான் தேர்தல் என்ற நிலைப்பாட்டை அவரது அரசு பெரும்பாலும் எடுத்து விட்டது என்றே கூறப்படுகின்றது. அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் நேரடியாக தெரிவித்து விட்டார். வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்தும் அத்தகைய செய்தி ஒன்றுடன்தான் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் புதிய கூட்டத் தொடருக்குச் செல்கின்றார் எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

ஆக, 2026 இல் மாகாண சபைத் தேர்தல் நடக்காது. இன்றைய நிலையில் அரசின் வழமையான அடுத்த வருடம் தேர்தல் என்ற கணக்கின்படி 2027-இல் அது நடத்தப்பட வேண்டும். ஆனால் 2027 பிறந்ததும் இந்த தேர்தலையும் 'பிள்ளையார் கல்யாணம்' போல மீண்டும் அடுத்த வருடம் என்று 2028க்குத் தள்ளி வைக்க அநுரகுமார திஸநாயக்காவின் அரசு பின்நிற்காது என்றே தோன்றுகின்றது.

உள்ளூராட்சி தேர்தலில் ஆளும் தரப்புக்கு ஏற்பட்ட பின்னடைவு 'சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது' என்பது போல, தேர்தல் தோல்வி கண்ட அரசுத் தரப்பு மாகாண சபைத் தேர்தலை எண்ணி வெருண்டு - வெகுண்டு - ஓடுகின்றது என்பதுதான் உண்மை.

# என்.பி.பி. அரசை மக்கள் விரைவில் விரட்டியடிப்பர்

## இப்படிக் கூறுகின்றது மஹிந்த அணி



"எமதுநாட்டைப்பாதுகாத்தஇராணுவத்தினரின் கௌரவத்தைப் பாதுகாக்கத் தவறியுள்ள தற்போதைய அரசை, இந்நாட்டு மக்கள் மிக விரைவில் வெறுத்து ஒதுக்குவார்கள்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பியால் நிஷாந்த தெரிவித்தார்.

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் மற்றும் தற்போதைய அரசியல் சூழல் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று இந்த நாடு ஒரு மயான பூமியாகவோ அல்லது இரத்த ஏரியாகவோ மாறாமல் இருப்பதற்குக் காரணம் எமது இராணுவத்தினரும், அவர்களுக்குத் தலைமைத்துவம் வழங்கிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆவார். அவர்கள் இட்ட அடித்தளத்தினாலேயே நாடு இன்று இந்த நிலையை எட்டியுள்ளது.

இருப்பினும், தற்போதைய அரசு எமது இராணுவத்தினரை கௌரவமான முறையில் அழைக்கக்கூடத் தயங்கி, அவர்களை வெறும் "சிப்பாய்கள்" என விளிப்பது மிகுந்த கவலைக்குரியது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரையோ அல்லது எமது இராணுவத்தினரின் கௌரவத்தையோ உலகிற்குப் பறைசாற்ற இந்த அரசு முன்வரவில்லை.

அரசில் உள்ளவர்கள் சிலர் தமது இயலாமையை மறைக்கப் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர். இராணுவத் தளபாடங்கள் மற்றும் வாகனங்கள் கடனுக்கும் உதவித் திட்டங்களின் கீழும் பெறப்பட்டவை என்பதால் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது என அவர்கள் கூறுவார்களானால், தற்போதைய ஜனாதிபதி அலுவலகம் மற்றும் அமைச்சுக்களில் உள்ள பௌதீக வளங்கள் பலவும் அவ்வாறு பெறப்பட்டவையே. அவற்றையும் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும்.

அநாவசியமான கருத்துக்களைக் கூறி மக்களின் அதிருப்திக்கு உள்ளாவதை விடுத்து, இராணுவத்தினருக்கும் மதத் தலைவர்களுக்கும் உரிய கௌரவத்தை வழங்க அரசு முன்வர வேண்டும். அப்பாவி மக்களின் தோள்களில் ஏறி ஆட்சிக்கு வந்தவர்கள் மக்களின் நம்பிக்கையைத் தக்கவைக்கத் தவறினால் மிக விரைவில் மக்களால் நிராகரிக்கப்படுவார்கள். இந்தநிலைமையைத் தவிர்க்கத் தேவையான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் எடுக்காவிட்டால், நாடு முன் எப்போதும் இல்லாத ஒரு அபாயகரமான நிலையை அடையும்." – என்றார்.

## இரும்புக்கம்பியால் தாக்கி

# கடை உரிமையாளர் கொடூரப் படுகொலை

## முன்னாள் இராணுவச் சிப்பாய் உட்பட மூவர் கைது



கடை ஒன்றின் உரிமையாளர் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டுக் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல் மாவட்டம், யக்வில – தம்பாடிய பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

தளபாடங்கள் தயாரிக்கும் கடை ஒன்றின் உரிமையாளரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

42 வயதுடைய கடை உரிமையாளர் ஒரு பிள்ளையின் தந்தை ஆவார்.

இவரது மனைவி வேலை நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்விரோதம் காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 40, 45 மற்றும் 46 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களில் ஒருவர் முன்னாள் இராணுவச் சிப்பாய் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வரும் மே, ஜூன் மாதங்களில் பெரும் போராட்டம் வெடிக்கும்

## அதை ஒடுக்கவே அவசரகாலச் சட்டம் நீடிப்பு என்று அநுர அரசுக்கு முஜிபுர் ரஹ்மான் கடும் கண்டனம்




"அநுர அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க அடக்குமுறைகளைக் கையாளத் தயாராகி வருகின்றது. எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதங்களில் இந்த அரசுக்கு எதிராக பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவே அவசரகாலச் சட்டம் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"அரசு தபால் கட்டணத்தை 20 ரூபாவால் அதிகரித்து, குறைந்தபட்ச முத்திரைக் கட்டணத்தை 70 ரூபாவாக மாற்றியுள்ளது. இன்றைய நவீன தொழில்நுட்பக் காலத்தில் தபால் சேவையைப் பயன்படுத்துவோர் குறைந்துள்ள நிலையில், இந்த விலையேற்றம் பாரம்பரிய தபால் முறையை மேலும் முடக்கும் செயலாக அமையும்.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதாக வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி. தலைமையிலான அநுர அரசு, இன்று மிகவேகமாக விலைகளை உயர்த்தி வருகின்றது.

2027ஆம் ஆண்டு வரை சம்பள உயர்வு வழங்க முடியாது என ஜனாதிபதி கூறுவது, தேர்தல் மேடைகளில் அவர் அளித்த வாக்குறுதிகளுக்கு எதிரானது என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

சுகாதாரம், கல்வி, மீன்பிடி மற்றும் விவசாயத் துறைகளில் பல்வேறு போராட்டங்கள் வெடித்துள்ளன. அரசைக் கொண்டுவர உதவிய அதே தரப்பினர், இன்று அரசின் செயல்பாடுகளால் அதிருப்தியடைந்து வீதிக்கு வரத் தொடங்கியுள்ளனர். நாட்டில் தற்போது அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை. ஆனால் அரசு அதைச் செய்துள்ளது.

வரவிருக்கும் மே, ஜூன் மாதங்களில் ஏற்படக்கூடிய மக்கள் போராட்டங்களையும், வேலைநிறுத்தங்களையும் அடக்குமுறை மூலம் ஒடுக்குவதற்காகவே அரசு இந்த அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

நெல் விவசாயிகளுக்கான நியாயமான விலை வழங்கப்படாமை மற்றும் களஞ்சியசாலைகள் மூடப்பட்டிருப்பது போன்ற சிக்கல்கள் காரணமாக விவசாயிகளும் போராட்டத்துக்குத் தயாராகி வருகின்றனர்.

அரிசி இறக்குமதி செய்ய மாட்டோம் என்று கூறிவிட்டு, தற்போது அரிசியை இறக்குமதி செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறான தன்னிச்சையான தீர்மானங்களுக்கு எதிராக சகல துறைகளிலிருந்தும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தயாராகி வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசும் இன்றிலிருந்தே தயாராகி வருகின்றது."

– என்றார்.

# வட்டிப் பணத் தகராறில் இளைஞர் கழுத்தறுத்துக் கொடூரக் கொலை!

## அம்பாந்தோட்டையில் பயங்கரம்




அம்பாந்தோட்டை மாவட்டம், பெலியத்தை பகுதியில் நேற்று திங்கட்கிழமை மாலை இளைஞர் ஒருவர் கழுத்தறுத்துக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

சம்பவத்தில் கட்டுவனைப் பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

வட்டிக்குப் பணம் கொடுப்பது தொடர்பாக ஏற்பட்ட நீண்டகால முரண்பாடு மற்றும் வாய்த்தர்க்கமே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நேற்று மாலை ஏற்பட்ட மோதலின் போது, சந்தேகநபர்கள் மேற்படி இளைஞரின் கழுத்தை அறுத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கொலையுடன் தொடர்புடையதாக அடையாளம் காணப்பட்டுள்ள இரண்டு சந்தேகநபர்கள் தற்போது தலைமறைவாகியுள்ளனர். அவர்களைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் விசேட விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

# பழிவாங்கல் அரசியலை அரசு முன்னெடுக்கிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



தற்போதைய அரசாங்கம் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் பழிவாங்குவதாகவும், குறிப்பாக மகா சங்கத்தினரை இலக்கு வைத்து திட்டமிட்ட பழிவாங்கல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

விசேட அறிக்கையொன்றை நேற்று வெளியிட்டு அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“அரசமைப்பின் படி பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளித்து அதைப் பாதுகாத்து போஷிப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

அதேபோல் ஏனைய மதங்களையும் கலாசாரங்களையும் மதிக்க வேண்டும். ஆனால், அரசாங்கம் நாட்டை ஒரு மதச் சார்பற்ற நாடாக மாற்ற முயற்சிக்கிறது.

மதகுருமார்களை பழிவாங்குவதை உடனடியாக நிறுத்தி, அனைத்து மதத் தலைவர்களுக்கும் உரிய கௌரவத்தை வழங்க வேண்டும்.

விவசாயிகள் அறுவடை செய்துள்ள போதிலும், அவற்றுக்கு நியாயமான விலையை வழங்கவோ அல்லது அவற்றை முறையாகக் கொள்வனவு செய்யவோ அரசாங்கம் தவறிவிட்டது.

நெல் களஞ்சியசாலைகள் பூட்டப்பட்டிருப்பதாக ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகிறது. மேலும், விவசாயம் முடிவடைந்தும் இன்னும் உர மானியம் விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை.

காலி - பூஸ்ஸ இராணுவ முகாமிலுள்ள 180 மாற்றுத்திறனாளி இராணுவத்தினரை பெப்ரவரி 16 ஆம் திகதிக்குள் பனாகொட பகுதிக்கு மாறுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இது அவர்களை அவமதிக்கும் செயல்.

சீனா இலவசமாக வழங்கிய பாடசாலை சீருடைகளைக் கூட மாணவர்களுக்கு முறையாக விநியோகிக்க இந்த அரசாங்கத்திற்கு இயலவில்லை.” என்று தெரிவித்துள்ளார்.

# இலங்கைத் தேயிலைக்கு நெருக்கடி: ஒரு மில்லியன் கிலோ உற்பத்தி இழப்பு



டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட அழிவுகள் காரணமாக, இலங்கை தனது தேயிலைக்கான சர்வதேச சந்தைகளை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் லுஷாந்த டி சில்வா எச்சரித்துள்ளார்.

சூறாவளி காரணமாக சுமார் ஒரு மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இது உலகளாவிய தேயிலைத் தேவையை ஈடுசெய்வதில் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கையின் விநியோகம் குறையும் பட்சத்தில், சர்வதேச கொள்வனவாளர்கள் ஏனைய நாடுகளை (இந்தியா, கென்யா போன்றவை) நாடும் அபாயம் உள்ளது.

கடந்த 15-20 ஆண்டுகளில் பாகிஸ்தான், எகிப்து மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளுக்கான பிரதான ஏற்றுமதியாளராக இலங்கை இருந்தபோதிலும், தற்போது அந்த சந்தைகளை ஓரளவு இழந்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

சவால்கள் நிலவினாலும், இலங்கை தொடர்ந்தும் 140 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்குத் தேயிலையை ஏற்றுமதி செய்து வருகின்றது.

இவற்றில் ரஷ்யா, ஈராக் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் தொடர்ந்தும் முன்னணியில் உள்ளன.

2024 ஆம் ஆண்டில் 245.7 மில்லியன் கிலோவாக இருந்த ஏற்றுமதி, 2025 இல் 257.44 மில்லியன் கிலோவாக (11.65 மில்லியன் கிலோ உயர்வு) அதிகரித்துள்ளது.

சீன சந்தை இலங்கைக்கு ஒரு மிகப் பெரிய வாய்ப்பாக உருவெடுத்து வருவதாக லுஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

சீனா ஒரு மிகப்பெரிய சந்தை. அங்குள்ள 1.4 பில்லியன் மக்களில் வெறும் 5 வீத பங்கினை நாம் பெற்றுக்கொண்டாலும், அது இலங்கைத் தேயிலைத் துறைக்கு ஒரு மிகப்பெரிய வெற்றியாக அமையும் என அவர் விளக்கினார்.



# டித்வா சூறாவளியில் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்கு நிதியுதவி

## இதுவரை 3.2 பில்லியன் ரூபா வழங்கல்

டித்வா சூறாவளியினால் வாழ்வாதாரத்தை இழந்த கால்நடை பண்ணையாளர்களுக்கு இதுவரை 3.2 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கால்நடை வள பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

தேசிய கால்நடை அனர்த்தத்திற்குப் பின்னரான அவசர தடுப்பூசி ஏற்றும் திட்டத்தை ஆரம்பித்து வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சூறாவளியினால் உயிரிழந்த பசுக்கள், பன்றிகள், ஆடுகள், இறைச்சிக்கோழிகள் மற்றும் முட்டையிடும் கோழிகள் ஆகியவற்றுக்காக இந்த இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்கு மேலதிக நிவாரணமாக இந்த விசேட தடுப்பூசித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக உலக வங்கியின் நிதி உதவியுடன் 2.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளை நோய்களிலிருந்து பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அடுத்த இரண்டு மாதங்களுக்குள் இத்திட்டத்தை முழுமையாக நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

சூறாவளியினால் சேதமடைந்த கால்நடை பண்ணைகளை மீண்டும் புனரமைப்பதற்கும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் தேவையான அனைத்து உதவிகளையும் அரசாங்கம் வழங்கும் என பிரதி அமைச்சர் இதன்போது உறுதியளித்தார்.

மேலும், உலக வங்கியின் மதிப்பீட்டின்படி டிட்வா சூறாவளியால் இலங்கையின் விவசாய மற்றும் கால்நடைத் துறைக்கு மாத்திரம் சுமார் 814 மில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருளுக்கு அடிமையான சாரதிகளை வேலைக்கமர்த்துபவர்களுக்கு அதிரடி எச்சரிக்கை

போதைப்பொருள்களுக்கு அடிமையான சாரதிகளைச் சேவையில் இணைத்துக்கொள்ளும் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராகப் போக்குவரத்து அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதன்படி, போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்களாயின், பஸ் உரிமையாளர்களின் வாகன அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படும் என அமைச்சர் எச்சரித்துள்ளார்.

அத்துடன், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போதைப்பொருட்களுக்கு அடிமையான சாரதிகளை சேவையில் ஈடுபடுத்தக் கூடாது எனவும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின் போது, அதிகளவான பஸ் சாரதிகள் போதைப் பொருள்களைப் பயன்படுத்தியமை தெரிய வந்ததை அடுத்தே, இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.






# முல்லையில் யாழ். பல்கலைக்கழகப் பீடம்: ஆரம்பமாகின்றன கட்டுமானப் பணிகள்!

## ஆளுநர் தலைமையிலான கூட்டத்தில் இணக்கப்பாடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியில் அபிவிருத்திப் பணிகளைப் படிப்படியாக ஆரம்பிப்பதற்கும், காணி ஆக்கிரமிப்பைத் தடுக்கும் வகையில் எல்லைகளை இட்டு வேலி அமைப்பதற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் இணக்கம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட விடயத்துக்கு அமைவாக, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

கடந்த 27.01.2026 அன்று நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியில் நீண்டகாலமாக எவ்வித அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை எனவும், இதனால் அக்காணியைத் தனிநபர்கள் ஆக்கிரமிப்பதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் ஆராய்ந்து உடனடித் தீர்வு காண்பதற்காக ஆளுநர் தலைமையில் இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச்சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

“நான் முல்லைத்தீவு மாவட்டச் செயலராகக் கடமையாற்றிய காலப்பகுதியிலேயே, இம்மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியை முன்னிட்டு உயர்கல்வி நிறுவனம் ஒன்றின் கிளையை நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தேன். முல்லைத்தீவு மாவட்டம் வளர்ச்சியடைய வேண்டுமாயின், அங்கு பல்கலைக்கழக பீடம் ஒன்று அமைக்கப்படுவது காலத்தின் கட்டாயமாகும்.” – என்று வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடலின் போது, வவுனியாப் பல்கலைக்கழகம் மன்னாரில் தமது பீடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா, “முல்லைத்தீவில் எமக்கு ஒதுக்கப்பட்ட காணியில் செயற்பாடுகளை ஆரம்பிக்க நாம் தயாராகவே உள்ளோம். எனினும், போதிய நிதி ஒதுக்கீடுகள் இன்மை காரணமாகவே தாமதம் ஏற்பட்டது.” – என்று தெளிவுபடுத்தினார்.

இதற்குத் தீர்வாக, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள விசேட நிதி ஒதுக்கீட்டிலிருந்து, பல்கலைக்கழகத்தின் ஆரம்பகட்ட கட்டுமானப் பணிகளுக்காக ஒரு தொகுதி நிதியை வழங்குவதற்கான முன்மொழிவைச் சமர்ப்பிப்பதாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் இதன்போது உறுதியளித்தார்.

பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட 44 ஏக்கர் காணிக்குரிய எல்லைகளை உடனடியாக அளவீடு செய்து, வேலி அமைக்கும் பணிகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் விரைவில் ஆரம்பிக்கும் எனத் துணைவேந்தர் உறுதியளித்தார்.

வேலி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்ட செயலகம் வழங்கும் நிதி உதவியுடன் படிப்படியாகக் கட்டட நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பதிவாளர், வவுனியாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சார்பில் பிரதிநிதிகள், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், வடக்கு மாகாண காணி ஆணையாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.











**தமிழ் ஊடகத்துறையில் தனக்கென ஓர் இடத்தை பிடித்துள்ள இராஜநாயகம் பாரதி மறைந்து ஓராண்டு ஓடிவிட்டது. ஈழப் போர் இடம்பெற்ற நெருக்கடியான காலத்தில் தனது சிறப்பான ஊடகப் பணியை ஆற்றியிருந்தமை தமிழர் தேசம் ஒரு போதும் மறவாது. கடந்த வருடம் பெப்ரவரி 9இல் மறைந்த ஊடகப் பேரொளி பாரதி இராஜநாயகம் அவர்களின் ஓராண்டு நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

# ஓராண்டு நினைவுகளில்
# ஊடகப் பேரொளி பாரதி

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா -**

நேரிய பார்வையில் அமைதியான பேச்சும், அதிராத சுபாவமும் பாரதியின் சிறப்பு அடையாளங்களாகும். ஆழமான பார்வைகளால் அனைத்தையும் அறிந்து வைத்திருந்த ஊடகப் பேரொளியாக விளங்கியவர்.

ஈழப் போராட்டம் முனைப்படைந்த காலகட்டத்தில், தமிழ் ஊடகத்துறையில் பாரிய பங்களிப்புச் செய்தவர்களில் ஒருவர் மறைந்த பாரதி இராசநாயகம் அவர்கள் ஆவார்.

'முரசொலி', 'வீரகேசரி', 'தினக்குரல்' என அவரது பத்திரிகையுலகப் பங்களிப்பு பரந்தது. இளம் எழுத்தாளர்கள் பலரின் படைப்புகளைத் தினக்குரலில் தொடர்ந்து வெளியிட்டு ஊக்குவித்த பெருமைக் குரியவர். அத்துடன் புதிய எழுத்தாளர்கள் பலரின் உருவாக்கத்துக்கு ஊக்குவித்து ஊடகக் களங்களை அமைத்தும் கொடுத்துள்ளார்.

**திருநெல்வேலி மைந்தன்**

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட பாரதி 1980 களில் 'ஈழமுரசு' பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் ஆரம்பித்தில் பணியாற்றினார்.

அதன் பின்னர் 'முரசொலி' பத்திரிகை ஆசிரிய பீடத்திலும் பணியாற்றினார்.

1987 இல் பாரதி 'முரசொலி' ஆசிரியர் பீடத்தில் பணிபுரிந்த காலகட்டத்தில், இலங்கை – இந்திய ஒப்பந்தம் கையொப்பமாகிய பின்னர் குடாநாட்டில் இருந்து கிழக்கு மாகாணத்துக்கு ஊடகப்பணி காரணமாக சென்றார். அப்போது ஏற்பட்ட விபத்தில் தனது வலது கையில் பாதிப்புக்கு உள்ளானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழத் தமிழ் தேசிய ஊடகவியலாளர்களில் முக்கிய மானமொருவராகத் தன்னை பின்னாளில் நிலை நிறுத்திக் கொண்ட பாரதி, 1990களின் பிற்பகுதியில் கொழும்பில், 'வீரகேசரி' பத்திரிக்கையின் ஆசிரிய பீடத்தில் உதவியாசிரியராகப் பணியாற்றினார்.

போர் சூழ்ந்த எண்பதுகளின் பிற்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கில் இருண்ட காலமாக இருந்தபோதிலும், யாழ்ப்பாணத்தில் அதிகமான செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் உருவாதற்கு ஈழப்போராட்டம் அடித்தளமிட்டது.

மறைந்த ஊடகர் பாரதி ஒரு பணியின் போது தனது வலது கையை இழந்ததன் மூலம் பெரும் விலையை செலுத்த வேண்டியிருந்தாலும், தொடர்ந்துபல காலம் ஊடகராக பணியாற்றி வந்தார். வடக்கில் மாத்திர மன்றி, அனைத்து தடைகளையும் துணிச்சலுடன் கடந்து கொழும்பிலும், ஒரு பத்திரிகையாளராக தொடர்ந்து பிரகாசித்தார்.

**தினக்குரல் பாரதி**

1997ஆம் ஆண்டு தினக்குரல் பத்திரிகை தோற்றம் பெறவே அதில் தன்னை இணைத்துக் கொண்ட பாரதி ஞாயிறு தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக 2021 ஆம் ஆண்டு வரை பணிபுரிந்ததுடன் தினக்குரல் இணையத்தள ஆசிரியராகவும் இருந்தார்.

தினக்குரலில் மூத்த ஆசிரியர்களில் ஒருவராக அவரது பதவிக்காலம் மேலும் பிரகாசித்தது. அத்துடன் இலங்கை தமிழ் ஊடக கூட்டணியின் தலைவராகவும் செயல்பட்டார். இலங்கையின் ஊடக சுதந்திரம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களில் அவர் முக்கியமான பங்கையும் வகித்தார்.

2020களின் இறுதியில் மீண்டும் தனது மண்ணுக்குத் திரும்பிய பாரதி ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றியதுடன், வீரகேசரியின் வடபிராந்திய பதிப்பின் ஆசிரியராகப் பணிபுரிந்த வேளையிலேயே காலமானார்.

ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் ஆர். பாரதி, அபிமன்யு, பார்த்திபன் ஆகிய பெயர்களில் பல்வேறு கட்டுரைகளை எழுதிவந்ததுடன் சர்வதேச ஊடகங்களுக்கும் அரசியல் கருத்துகளையும்



செவ்விகளையும் வழங்கி வந்தார். தாயகத்தில் பல மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட ஊடக பயிற்சிப் பட்டறைகளிலும் பணியாற்றி இளம் மாணவர்களுக்கு ஊக்கம் அளித்து பயிற்சிகளை வழங்கியுள்ளார்.

ஊடகர் பாரதியின் பணியை கௌரவிக்கும் வகையில் பெப்ரவரி 2012 வெளியான மல்லிகை இதழ், இவரைப்பற்றிய சிறப்பிதழாக வெளியிடப்பட்டது. அவரது மறைவு இலங்கை ஊடக சகோதரத்துவத்திற்கும் தமிழ் ஊடகங்களுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். தமிழ் ஊடகத்துறையில் நிரப்ப முடியாத வெற்றிடமாய் பாரதியின் நினைவு கனத்துக் கிடக்கின்றது. நேரிய பார்வையில் அமைதியான பேச்சும், அதிராத சுபாவமும் பாரதியின் சிறப்பு அடையாளங்களாகும். ஆழமான பார்வைகளால் அனைத்தையும் அறிந்து வைத்திருந்த ஊடகப் பேரொளியாக இராஜாநாயகம் பாரதி விளங்கினார்.

# கிவுல் ஓயா திட்டத்தை மீளாய்வு செய்யுங்கள் தவறினால் நடைமுறைப்படுத்த இடமளியோம்!

## மணலாறில் சத்தியலிங்கம் எம்.பி. இறுக்கமாகத் தெரிவிப்பு



(பா.சதீசன்)

கிவுல் ஓயா திட்டத்தை மீளாய்வு செய்யுங்கள்; இல்லையேல் அதனை நடைமுறைப்படுத்த இடமளிக்க மாட்டோம் என மணலாறில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வைத்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் அரசுத் தரப்பிடம் இறுக்கமாகத் தெரிவித்துள்ளார்.

கிவுல் ஓயா திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் கூட்டமொன்று நேற்றைய தினம் மணலாறு பகுதியில் உள்ள மகாவலி அதிகாரசபையின் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கூட்டத்திற்காக திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்களை சேர்ந்த பிரதேசசபை உறுப்பினர்கள், கமக்காரர் அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டாலும், தமிழ்ப் பகுதிகளைச் சேர்ந்த பிரதேசசபை உறுப்பினர்கள், கமக்காரர் அமைப்புக்களுக்கு முறையாக அறிவிக்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் கூட்டத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்தால் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் கிவுல் ஓயா திட்டம் தொடர்பிலான நீண்டதொரு ஆவண விளக்கத்தை வழங்கியிருந்தார்.

இதன் பிற்பாடு பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் திட்டம் தொடர்பில் இடம்பெற்றன. இதன்போது கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் நீண்டதொரு விளக்கத்தைப் பாதிக்கப்படும் தமிழ் மக்களின் சார்பாக நிகழ்த்தினார். பல்வேறு கேள்விகளையும் எழுப்பினார்.

பிரதி அமைச்சர், பணிப்பாளர், திட்ட அதிகாரிகள் ஆகியோர் அவற்றிற்குப் பதிலளிக்க முடியாது தடுமாறினர்.

இதன்போது மருத்துவர் சத்தியலிங்கம் பின்வரும் விடயங்களை முதன்மைப் படுத்தி பேசினார்:-

கிவுல் ஓயா திட்டமானது 1983இல் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் நீர்த் தேவையை பூர்த்திசெய்வதற்காக உருவாக்கப்பட்ட திட்டமாகும். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்திலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட முயற்சிக்கப்பட்டபோதும் அது கிடப்பில் போடப்பட்டது. அதாவது எதப் பகுதியில் இதுவரை ஒரு போகம் விவசாயம் செய்யும் விவசாயிகள் இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால் இரண்டு போகம் விவசாயம் செய்யும் நிலையை உருவாக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகக் காணப்பட்டது.

இந்த திட்டத்தில் பயனடையும் தரப்பினர் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக கிம்பிலிவெவ பகுதியில் 37 வீடுகள் நீருக்குள் மூழ்குகின்றமை உள்ளிட்ட பயனடையும் தரப்பினர் தொடர்பான விடயங்களே தெரிவிக்கப்படுகின்றன்ச். ஆயினும், கிவுலு ஓயா நீர்தேக்கத்தின் நீரேந்து பகுதிக்குள் அகப்பட்டு பாதிக்கப்படும் வவுனியா வடக்கு தமிழ் மக்களின் பூர்வீக நிலமான வெடிவைத்தகல், மருதோடை ஆகிய தமிழ் கிராம சேவையாளர் பிரிவுகள் தொடர்பில் எதிவித விடயங்களும் இத்திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்படவில்லை.

2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கடந்த 15 வருடங்களாக இரகசியமாக செய்யப்பட்ட இத்திட்டம் பற்றி தற்போது தான் மகாவலி அதிகாரசபை பகிரங்கமாக முதல் கலந்துரையாடலை செய்கின்றது.

அத்துடன் இக்கூட்டத்திற்கு கூட திட்டத்தால் பயன்பெறும் மக்களையும், தரப்பினரையும் அழைத்துள்ளீர்களே தவிர, திட்டத்தால் பாதிக்கப்படும் மக்களையோ, தரப்பினரையோ அழைக்கவில்லையே. ஏன் இந்த பாரபட்சம்?

கிவுலு ஓயா நீர் தேக்கத்தின் நீரேந்து பகுதியானது வனவளதிணைக்களத்திற்கு சொந்தமான காடு என விளக்கமளிக்கப்பட்டது. வனவள திணைக்களத்தினால் தமது பகுதி என அடையாளப் படுத்தப்பட்ட இடங்களுக்குள் எமது பூர்வீக குளங்கள், வயல் நிலங்கள் உள்ளன. இந்த இடங்களை விடுவித்தல் பற்றி இங்கிருக்கும் இரண்டு அரச அதிபர்களுடனும், மாவட்ட அபிவிருத்தி கூட்டங்களிலும் பல முறை கோரியுள்ளேன். ஆனால் அவை எவற்றையும் வனவள திணைக்களம் இதுவரை விடுவிக்கவில்லை. ஆகவே நீரேந்து பகுதிக்குள் எமது விவசாய நிலங்கள் உள்ளன.

2002இல் அரச அதிபராக இருந்த திரு.கணேஸ் அவர்களின் காலப்பகுதியில் இப்பகுதியை சேர்ந்த பெரிய மருதோடைக்குளம், சிற்றாற்றுக்குளம், கல்லாற்றுக்குளம் ஆகிய மூன்று குளங்களையும் புனரமைத்து 2000 ஏக்கர் வயல்செய்கை மேற்கொள்ள நியாப் (NIAP) நிறுவனத்திற்கு திட்டமொன் மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் 2003இல் சிரான் (SIHRAN) நிறுவனத்தினூடாகவும் மற்றொரு திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் தலையீட்டினால் அந்த இரண்டு திட்டங்களும் கைகூடவில்லை. தற்போது இந்த நிலங்களும் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் 2,330 ஹக்டயர் நிலம் நீருக்குள் மூழ்கும் என மகாவலி அதிகாரசபையால் சொல்லப்பட்டாலும், அவர்கள் சொன்னதைவிட மிக அதிகளவிலான அளவு நிலம் நீருக்குள் மூழ்கும் நிலை உள்ளது. இதுபற்றி அவதானம் செலுத்த வேண்டியுள்ளது.

நீர்த்தேக்கத்திற்காக காடுகளை அழிப்பதால் யானை - மனித மோதல் அதிகரிக்குமென இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான நிலையில் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும், தீர்வுகளும் பயனடையும் தரப்பினருக்கே குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, பாதிப்படையும் தரப்பினருக்கானது பற்றி குறிப்பிடப்படவில்லை. நீரேந்து பகுதிகள் ஊடாக தமிழ் மக்கள் வாழும் இடங்களை நோக்கியே யானைகள் செல்லும் நிலை ஏற்படுமென்பதுடன் அவர்களே இதனால் அதிக பாதிப்புக்களை எதிர்கொள்வார்கள்.

இத்திட்டம் 2011 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அரசினால் வவுனியா வடக்கில் வாழும் மக்களைப் பற்றி கருத்தில கொள்ளாமல் கொண்டுவரப்பட்டதாகும். அதே திட்டத்தை இந்த அரசாங்கமும் மீளாய்வு ஏதும் செய்யாமல், எமது மக்களுடன் கலந்துரையாடாமல், நடைமுறைப்படுத்த முயல்வது இந்த அரசும் முன்னைய அரசாங்கங்கள் போல்தான் எனும் மனநிலையை எங்கள் மத்தியில் உருவாக்குகின்றது.

ஆகவே தயவுசெய்து இத்திட்டத்தை உடனடியாக மீளாய்வு செய்து, எமது மக்களுடனும் மக்கள் பிரதிநிதிகளுடனும் கலந்துரையடப்படவேண்டும். இல்லையேல் இத்திட்டத்தை செயற்படுத்தவோ நடைமுறைப்படுத்தவோ நாம் ஒரு போதும் ஆதரவளிக்கப்போவதோ, விடப்போவதோ இல்லை. - எனவும் தெரிவித்தார்.

# தமிழருக்கு மரணத்தை ஏற்படுத்தும் வலியேதான் மகாவலி அதிகாரசபை

## கிவுல் ஓயாத் திட்டத்தை கடுமையாக எதிர்த்து ரவிகரன் எம்.பி. கருத்து







**(பா.சதீசன்)**

தமக்கு மரணத்தை ஏற்படுத்துகின்ற வலியாகவே மகாவலி அதிகாரசபையை தமிழ் மக்கள் நோக்குகின்றனர் என்ச் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டுகின்றார். தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்து மேற்கொள்ளப்படும் மகாவலி அதிகாரசபையின் கிவுல் ஓயாத் திட்டத்திற்கும் அவர் மிகக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்புச் செயற்படுகளில் ஈடுபடும் மகாவலி அதிகாரசபை போன்ற திணைக்களங்களினாலேயே தேசியமக்கள் சக்தியின் ஆட்சி வீழ்ச்சியடையுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகாவலி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படவுள்ள கிவுல் ஓயா திட்டம் தொடர்பில் நேற்று மணலாறு பகுதியில் உள்ள மகாவலி அதிகார சபையின் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற தெளிவூட்டல் கலந்துரையாடலில் பங்கேற்று கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

### கடுமையான அழுத்தங்களினாலேயே மகாவலி கலந்துரையாடலுக்கு அழைப்பு

தற்போதுதான் இந்த கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பில் விளக்கம் தருவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டு, கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த திட்டத்தால் பாதிக்கப்படப் போகின்ற மக்களை ஒருபோதும் மகாவலி அதிகாரசபை அழைத்து கலந்துரையாடவில்லை.

கடந்த 23.01.2026அன்று நாடாளுமன்றக் குழு அறையில் இடம்பெற்ற கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் இந்தத் திட்டத்தினால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள மக்களோடு கலந்துரையாடலை ஏற்படுத்துமாறு கோரியிருந்தோம்.

அதனைத் தொடர்ந்து எம்மால் இந்த கிவுல் ஓயாத் திட்டத்திற்கு எதிராக கடந்த 02.02.2026அன்று பாரிய எதிர்ப்பு ஆரப்பாட்டமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இத்தகைய எமது கோரிக்கைகள் மற்றும் ஆரப்பாட்டத்தின் மூலம் எழுந்த அழுத்தங்கள் காரணமாகவே இவ்வாறு இந்த கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

### தமிழர் இடங்கள் பற்றிய விவரங்களை மூடி மறைக்கும் மகாவலி அதிகாரசபை

அதேவேளை இந்த திட்டத்திற்காக அபகரிக்கப்படுகின்ற தமிழ் மக்களின் விவரங்கள் இதிலே மகாவலி அதிகார சபையால் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை.

குறிப்பாக கூழாங்குளம் வயல்காணிகள் 88ஏக்கர், வெடிவைத்தகல்லு 87 ஏக்கர், வெடிவைத்த கல்லு கிராமம் 124 ஏக்கர், ஈச்சங்குளம் வயல் 95 ஏக்கர், கோவில் புளியங்குளம் 158 ஏக்கர், காட்டுப்பூவரசங்குளம் 258 ஏக்கர், காஞ்சூரமோட்டைக்கிராமம் 100 ஏக்கர் உள்ளடங்கலாக மொத்தம் 910 ஏக்கர் அபகரிக்கப்பட்டுள்ளதாக கிவுல் ஓயா திட்டம் தொடர்பான அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும் தற்போது அந்த விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்படவில்லை.

### தமிழருக்கு மரணத்தை ஏற்படுத்தும் வலியேதான் மகாவலி அதிகாரசபை

மகாவலி அதிகாரசபை என்றால், மரணத்தை ஏற்படுத்துகின்ற வலி என்றே தமிழ் மக்கள் மத்தியில் ஓர் அபிப்பிராயம் இருக்கின்றது. மகாவலி அதிகார சபையைத் தமிழ் மக்கள் அவ்வாறே கருதுகின்றனர்.

மகாவலி அதிகார சபையினால் முல்லைத்தீவிலோ, வவுனியாவிலோ ஒரு தமிழ் மகனுக்கும் மகாவலி அதிகாரசபை காணிகளை வழங்கவில்லை. தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை அபகரித்து பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கின்ற வேலைகளையே மகாவலி அதிகாரசபை மேற்கொண்டு வருகின்றது.

எனவேதான் மாகவலி அதிகார சபையை மரணத்தைத் தருகின்ற வலி எனத் தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

### கிவுல் ஓயாத் திட்டத்தினாக் பாதிப்புறும் தமிழ் மக்கள் அழைக்கப்படவில்லையே

குறிப்பாக கடந்த 1984, 1985ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே இந்தப் பகுதிகளில் பெரும்பான்மையினத்தவர்கள் வலிந்து குடியேற்றப்பட்டனர்.

மேலும் தற்போதைய ஆட்சியா

தொடர்ச்சி▼

# தமிழருக்கு மரணத்தை ஏற்படுத்தும் வலியேதான் மகாவலி அதிகாரசபை





தொடர்ச்சி▲

ளர்கள் இவ்விதமான திட்டங்களைச் செயற்படுத்த முயற்சிக்கும்போது பாதிக் கப்படுகின்ற மக்கள் அனைவரையும் அழைத்துத் தெளிவுபடுத்த வேண்டும். இந்தக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட பெரும்பான்மையின கமக் கார அமைப்புக்களைச் சாரந்தவர் களுக்கு கருத்துக் கூறுவதற்குச் சந் தர்ப்பம் வழங்கப்படுகின்றது. எனினும் இத் திட்டத்தால் பாதிப்புக்களை எதிர்நோக்கு கின்ற, இத்திட்டத்தினால் தமது நிலங் களை இழக்கின்ற தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. எனவே பாதிக்கப்படுகின்ற எமது அப்பாவித் தமிழ் மக்களுக்கு இந்தக் கலந்துரையாடலில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு சந் தப்பம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கூழாங்குளம் கமக்கார அமைப்பு, வெடிவைத்தகல்லு கமக்கார அமைப்பு, ஈச்சங்குளம் கமக்கார அமைப்பு, கோவில் புளியங்குளம் கமக் காரர் அமைப்பு என்பன இந்தக் கலந் துரையாடலுக்கு அழைக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இவ்வாறாக மகாவலி அதிகாரசபை இத்திட்டத்தினால் பாதிப்புக்களை எதிர் நோக்கியுள்ள எமது தமிழ் மக்களைப் புறக்கணித்து இந்தக் கலந்துரையா டலை ஏற்பாடு செய்துள்ளது. இவ்வாறே ஒவ்வொரு விடயங்களிலும் மகாவலி அதிகாரசபை எமது தமிழ் மக்களைப் புறக்கணிப்புச் செய்துவருகின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட தமிழ் மக் களை இந்தக் கலந்துரையாடலில் புறக் கணித்துவிட்டு ஏற்கனவே மணலாற்றில் வலிந்து குடியேற்றப்பட்ட 4,372 பெரும் பான்மையினக் குடும்பங்களையும், குடியேற்றப்படவுள்ள 1,626 பெரும்பான் மையினக் குடும்பங்களையும் இத்திட்டத் தில் உள்வாங்க மகாவலி அதிகாரசபை முயற்சிக்கின்றது.

என்னால் முன்வைக்கப்படுகின்ற இந்த குற்றச்சாட்டுக்களை மகாவலி அதிகாரசபை ஒருபோதும் மறுத்துப் பேச முடியாது.

### கிவுல் ஓயாத்திட்டத்தால் நில அதிர்வு அபாயம்

இத்திட்டத்தை செயற்படுவதானால் வானிலை ஆய்வாளர்களுடைய மதிப் பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதா? இந்த இடங்கள் பருவப்பெயர்ச்சி மழை யுடன் தொடர்புடைய இடங்களாகும். எனவே இத்திட்டத்திற்காக பாரிய அளவில் காடுகள் அழிக்கப்படுவதால் மழைவீழ்ச்சி குறைவடையுமென சுற்றுச்சூழல் மதிப் பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளது.

மேலும் அண்மையில் முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களில் ஒரு நில அதிர்வொன்று ஏற்பட்டிருந்தது.

இவ்வாறான பாரிய நீர்த்தேக்கங்களை அமைப்பதன்மூலம் புவித்தட்டில் ஏற்படு கின்ற பாரத்தினாலேயே நிலதிர்வுகள் ஏற்படுகின்றன எனவும் ஆய்வாளர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அத்தோடு இத்தகைய நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளபோது நில அதிர்வு கள் காரணமாக அணைக்கட்டுக்கள் உடைப்பெடுத்தால் பாரிய பாதிப்புக்கள் ஏற்படுமெனவும் ஆய்வாளர்களால் கூறப்படுகின்றது.

எனவே இந்தப் பாரிய நீர்த்தேக்கத் தால் அத்தகைய பாதிப்புக்கள் ஏற்பட்டால் என்ன செய்வது? அத்தகைய பாதிப்பு நிலைகள் தொடர்பில் மதிப்பீட்டு அறிக் கைகள் பெறப்பட்டுள்ளனவா?

எவ்வித முறையான அறிக்கைகளு மின்றி இங்கு வருகை தந்து, இங்கு எமது மக்களின் பூர்வீகக் காணிகளையும், அடர்வனங்களையும் ஆக்கிரமித்து, தமிழ்மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்து கின்ற வகையிலான மற்றும் முறையற்ற திட்டங்களையும் மகாவலி அதிகாரசபை மேற்கொள்ள முனைகின்றது.

நாம் சிங்கள மக்களுக்கோ, முஸ்லிம் மக்களுக்கோ எந்த இனமக்களுக்கும் எதிரானவர்கள் கிடையாது. பெரும்பான் மையின இனவதாதிகளுக்கே எதிரான வர்கள்.

இவ்விதமான பாதிப்புக்களை தோற்றுவிக்கின்ற வகையிலான முறை யற்ற திட்டங்களை மகாவலி அதிகாரசபை இங்கு ஏற்படுத்த முனைவதை எம்மால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

### தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் வீழ்ச்சிக்கு மகாவலி காரணமாகும்

மேலும் எமது தமிழர் தாயகப் பரப்புக் களில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லி யல் திணைக்களம் போன்ற திணைக் களங்களே தமிழ் மக்களின் காணிகளை அதிகளவில் அபகரிப்புச் செயற்பாடு களை மேற்கொண்டு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்ற வகையில் செயற்படு கின்றன. இந்த திணைக்களங்களே இந்த ஆட்சியாளர்களின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமையும். எனவே இந்த திணைக்களங்களின் அத்துமீறிய அப கரிப்புச் செயற்பாடுகளுக்கு கடிவாள மிடுமாறு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவிடம் கேட்டுக்கொள்கின் றேன் – என்றார்.



# மன்னார் கரிசலில் புதிய இறை மாளிகை நேரில் பார்வையிட்டார் ரிஷாத் பதியுதீன்





மன்னார் மாவட்டத்தின் கரிசல் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பள்ளிவாசலை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் நேற்று முன்தினம்நேரில் சென்று பார்வையிட்டார்.

இவ்விஜயத்தின் போது, பள்ளிவாசல் தலைவர் அல்-ஹாஜ் அலாவுத்தீன், மன்னார் பிரதேச சபை தவிசாளர் ஜப்ரான், உப தவிசாளர் புர்ஹான், பள்ளிவாசல் அதிபர் பழீல், இணைப்பாளர் முனவ்வர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

சமூக நலன் மற்றும் இறை சேவையை முதன்மையாகக் கொண்டு, இவ்வழகிய பள்ளிவாசல் மாளிகை சமூக செயற்பாட்டாளர் அல்-ஹாஜ் அலாவுத்தீனால் அவரது சொந்த நிதியிலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

“இத்தகைய மகத்தான பணிக்காக அல்-ஹாஜ் அலாவுத்தீனுக்கு இறை அருளும் நன்மைகளும் கிடைக்க வேண்டும். அவரின் இந்த நற்காரியத்தை இறைவன் பொருந்திக் கொள்ள வேண்டும். வடக்கு சமூகத்தின் சார்பாக எனது மனப்பூர்வமான நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்” என நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வாழ்த்தினார்.

# ஆறு பாடசாலைகளில் புதிய கட்டடங்கள் அம்பாறை, தமண பிரதேசங்களில் திறப்பு





(ஜலீல்.ஜீ )

ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டின் கீழ், அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை மற்றும் தமண பிரதேசங்களில் அமைந்துள்ள 6 பாடசாலைகளில் கட்டப்பட்ட புதிய கட்டடங்கள் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் இணை அமைச்சர் வசந்த பியத்திஸ்ஸ ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

கல்வி அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக இந்நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.

# யாழ். பல்கலை ஊழியர் சங்கத்தின் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் முன்வைத்த நிர்வாக முறைகேடுகள் மற்றும் ஊழியர் நலன் தொடர்பான கோரிக்கைகள் குறித்து நேற்று நடைபெற்ற உயர்மட்டக் கலந் துரையாடலில் சாதகமான தீர்வு எட்டப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 11.30 மணியள வில், துணைவேந்தர் தலைமையில் நடை பெற்ற இந்தச் சந்திப்பில் அனைத்து பீடாதிபதிகள், மூன்று பேரவை உறுப்பி னர்கள், பதிவாளர், நிதியாளர் உள்ளிட்ட முக்கிய நிர்வாக அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் போது, நிரந்தர மற்றும் உள்ளக பணியிட வெற்றிடங்கள் நிரப்புதல், தற்காலிக நியமனங்களில் வெளிப்படைத்தன்மை, மேலதிக நேரக் கொடுப்பனவு, இடர்கடன், வருடாந்த படி உயர்வு, ஊழியர் நலன், சுகாதாரம், பாதுகாப்பு, அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் விரிவாக ஆரா யப்பட்டன.

மேலும், கடமையின் போது உயிரிழந்த ஊழியருக்கான இழப்பீட்டுக் கொடுப்ப னவுகள் தொடர்பான தாமதம் மற்றும் கிளிநொச்சி வளாக ஊழியர்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என நிர்வாகம் உறுதியளித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நல்லி ணக்கம், பரஸ்பர புரிதல் மற்றும் நடை முறை தீர்வுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததாக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் தொழிற் சங்க நடவடிக்கைகள் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளமையுடன், பல்கலைக் கழகத்தின் கல்வி மற்றும் நிர்வாகச் செயல்பாடுகள் இடையூறின்றித் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் இந்த நேர்மறை அணுகுமுறை, ஊழியர் நலனை மேம்படுத்துவதோடு, கல்வி நிறுவனத்தின் நிலைத்தன்மையையும் வலுப்படுத்தும் முக்கிய முன்னேற்றமாக அமையும் என நம்பிக்கை வெளி யிடப்பட்டுள்ளது.

# மீனவரின் படகை மோதித் தள்ளிய கடற்படை டோறா



(மரியசீலந் திலைக்ஸ்)

வங்காலை கடற்பரப்பில் கடற் றொழிலுக்கு சென்ற வங்காலை மீனவர் ஒருவரின் படகு ஒன்றுடன் நேற்று முன் தினம் மாலை கடற்படையினரின் டோறாப் படகு மோதி விபத்துக்குள்ளாகியுள் ளது.

விபத்துக்குள்ளான படகையும் மீன வர்கள் இருவரையும் கைவிட்டு கடற்படை படகு பொறுப்பின்றிச் சென்றதால் கடலில் விழுந்த இரு மீனவர்களும் உயிருக்குப் போராடியுள்ளனர்.

தங்கள் உயிரைக் காக்கும் பொருட்டு நீச்சல் மூலம் மற்றுமொரு மீனவர் பட கைச் சென்றடைந்த அவர்கள் காப் பாற்றப்பட்டு கரையை வந்தடைந்துள்ள னர்.

கடற்படையின் டோறா மோதியதில் மீனவரின் படகும் இயந்திரமும் பாவிக்க முடியாத நிலையில் நொருங்குண்டு காணப்படுகின்றது.

இரு மீனவர்களையும், அவர்களது படகுடன் சக மீனவர்கள் கரைக்குக் கொண்டு வந்துள்ளனர்.






# மன்னார் மாவட்டத்தில் இன்று முதல் மாட்டு இறைச்சி நிர்ணய விலையில்





(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் மாவட்டத்தில் உள்ள அனைத்து மாட்டு இறைச்சி விற்பனை நிலையங்களிலும், நிர்ணய விலையில் மாட்டு இறைச்சி விற்பனை செய்ய நேற்றைய தினம் திங்கட்கிழமை மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மாட்டிறைச்சியின் நிர்ணய விலை தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்றுக் காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்), உதவி மாவட்ட செயலாளர், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள், வருமான வரிஇ பரிசோதகர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மாட்டிறைச்சி குத்தகை கடை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்துரையாடி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை மற்றும் முசலி பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி சபைப் பிரிவுகளிலும் இன்று செவ்வாய்க்கிழமை முதல் நிர்ணய விலையில் விற்பனை செய்ய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக ஒரு கிலோ தனி இறைச்சி 2200 ரூபாவுக்கும், ஒரு கிலோ முள் இறைச்சி (அதில் 200 கிராம் முள்ளும் 800 கிராம் இறைச்சியும்) 2000 ரூபாவுக்கும், ஒரு கிலோ தனி முள்ளு 1200 ரூபாய்க்கும், ஒருகிலோ ஈரல் 2500 ரூபாவுக்கும் விற்பனை செய்வதற்கு மாவட்ட செயலாளர், தவிசாளர்கள் மற்றும் கடை உரிமையாளர்களின் முன்னிலையில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் இறைச்சி கடை உரிமையாளர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பானகோரிக்கைகளைமுன்வைத்தனர். அவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு தருவார் என மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

# இந்தியப் பாடகர் பீ.உன்னிகிருஷ்ணன் பங்கேற்கின்ற இசை நிகழ்வு மட்டக்களப்பு கல்லடியில் 17ஆம் திகதி



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பில் முதன் முறையாக பிரபல இந்திய பாடகர் பீ.உன்னி கிருஷ்ணன் பங்கேற்கும் 'தெய்வீக அனுபவமும் தெய்வீக இசையும்' எனும் இசை நிகழ்ச்சி இடம்பெறுகின்றது. அது தொடர்பான ஊடக சந்திப்பு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த ஊடக சந்திப்பில் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் பிரதான இணைப்பாளர் சகோதரர் வீ.கே.சுரேந்திரன் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார்.

மகா சிவராத்திரியினை சிறப்பிக்கும் வகையில் எதிர்வரும் 17ஆம் திகதி கல்லடி கடற்கரையில் இடம்பெறவுள்ள பிரபல பாடகர் பீ. உன்னிகிருஷ்ணனும் அவரது மகள் செல்வி உத்தரா உன்னி கிருஷ்ணனும் பங்கேற்கும் 'தெய்வீக அனுபவமும் தெய்வீக இசையும்' எனும் இசை நிகழ்ச்சியில் ஆன்மீகப் பேச்சாளராக திருவண்ணாமலையில் இருந்து தெய்வீக சகோதரி பி.கு.உமா அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

எதிர்வரும் 14, 15, 16 திகதிகளில் கல்லடி கடற்கரையில் 12 ஜோதிலிங்க தரிசன கண்காட்சி இடம் பெற்று அதனைத் தொடர்ந்து 17 ஆம்திகதி பி.ப 6.30 மணி தொடக்கம் பி.ப 10.30 மணி வரைக்கும் இசை நிகழ்வு இடம் பெறும்.

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் பிதான தலைமையகம் இராஜஸ்தானில் உள்ளது. உலகம் முழுவதும் 5,000 கிளைகளை அது கொண்டுள்ளது. 147 நாடுகளில் அதன் கிளைகள் வியாபித்துள்ளன. இலங்கையில் அதிகமான மாவட்டங்களில் கிளைகள் நிறுவப்பட்டு தெய்வீக செயற்பாடுகள் மற்றும் சமூக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 25 வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம் தனது சேவையை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. - என அவர் தெரிவித்தார்.



# 78 ஆவது சுதந்திர தினமும் தமிழ் மக்களது நிலையும்...!

- கி.வசந்தரூபன் -

இலங்கைத் தீவு பிரித்தானிய ஏகாதிபத்தியத் திடம் இருந்து சுதந்திரம் பெற்று 78 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. ஆனாலும் இலங்கைத் தீவில் இனங்களுக்களுக்கிடையில் புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்சினை இன்னும் தீர்க் கப்படாத நிலையிலேயே உள்ளது. இதன் காரண மாகவே ஒரு பகுதியினர் சுதந்திர தினம் கொண்டாட் டத்தில் ஈடுபட, இன்னொரு பகுதியினர் அதனைத் தமது கரிநாளாக அனுஷ்டித்து வருகின்றனர். காலத் திற்கு காலம் ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்கள் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசுகின்ற போதும் அது தொடர்பில் ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுத்தவர்களாக இல்லை. தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்காவும் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசி வரும் கருத்துகளும் அவ்வாறே வெற்று வார்த்தைகளுடன் முடிந்து விடுமா என்ற கேள்வியும் பாதிக்கப்பட்ட மக்களிடம் உள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரண மாக வீதிக்கு மக்கள் இறங்கியமையால் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பதவி விலகி யிருந்தார். அதன் தொடர்ச்சியாக ரணில் விக்கிரமசிங்க தற்காலிக ஜனாதிபதியாகப் பதவியேற்றுப் பின்னர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் ஆதர வுடன் இடைக்கால ஜனாதிபதியானார்.

அவர் பதவிக்கு வந்ததும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் பிரச்சினைகள் இருப்பதை ஏற்றுக் கொண்டார். 75 ஆவது சுதந்திர தினத் திற்கு முன்பாக அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பேன் எனவும், அனைவரும் இணைந்து சுதந்திர தினத்தை கொண்டாட எதிர்பார்த்திருக்கின்றார் என்ச்வும் கூறி யிருந்ததார். அதன் ஒரு கட்டமாக சர்வகட்சி சந்திப்பு கள், தமிழ் கட்சி பிரதிநிதிகளுடனான சந்திப்புகள் என்பன நடந்தன. ஆனால் தீர்க்கமான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை. சுதந்திர தினத்திற்கு முன்னதாக பிரச்சுனைக்குத் தீர்வு என்பது வெறும் சந்திப்புகளுடன் நிறைவுக்கு வந்திருந்தது. 75 ஆவது சுதந்திர தினமும் கடந்து தற்போது 78 ஆவது சுதந்திர தினமும் முடிவடைந்துள்ளது.

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினம் சுதந் திர சதுக்க வளாகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவின் தலைமையில் "இலங்கையைக் கட்டி யெழுப்புவோம்" என்ற தொனிப் பொருளில் எளிமை யாக இடம்பெற்றிருந்தது. இதன்போது நாட்டின் இனப் பிரச்சினை தீர்வு குறித்து ஜனாதிபதி தெளிவாக எதுவும் குறிப்பிடவில்லை. நாட்டின் ஒவ்வொரு மாவட்டங் களிலும் தேவையற்ற செலவுகளை தவிர்த்து அரசியல் வாதிகளின் தலையீடு இன்றி மாவட்ட செயலகங்களில் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. சில தமிழர் பகுதிகளில் வாகனப் பேரணிகளும் கடந்த ஆண்டைப் போன்று இம்முறையும் இடம்பெற்றிருந்தன.

வடக்கு - கிழக்கு தமிழர் பகுதிகளில் தமிழ் மக்க ளின் உரிமைக் குரலை வெளிப்படுத்தி சுதந்திர தினத் திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றிருந்தன. பல்வேறு அச்சுறுத்தல்கள், அடக்கு முறைகளுக்கு மத்தியில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பிலும் மற்றும் கிளிநொச்சியிலும் சுதந்திர தினத்தை கரி நாளாக பிரகடனப்படுத்தி ஆர்ப்பாட்டம் இடம்பெற் றிருந்தது. இவைதவிர, யாழ் பல்கலையில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டிருந்தது. தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் முகமாக புலம் பெயர் தேசங்களிலும் இலங்கைத் தூதரகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டங்கள் நடந்திருந்தன. விசேடமாக பிரித் தானியாவில் இலங்கை தூதரகம் முன்பாக சுதந் திர தினதனத கரிநாள் எனத் தெரிவித்தும் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெற்றிருந்தது.

சுதந்திர தினத்தில் தெற்கில் இடம்பெற்ற கொண் டாட்டங்களும் வடக்கு - கிழக்கு மற்றும் புலம் பெயர் தமிழர் தேசங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்

தொடர்ச்சி▼

# 78 ஆவது சுதந்திர தினமும் தமிழ் மக்களது நிலையும்...!

தொடர்ச்சி▲

களும் இந்த நாட்டில் இன்னும் இரு வேறு தேசங்களாக மக்கள் வாழ்ந்து வருகின்றம்சியையே படம்போட்டு காட்டுகின்றன. இந்த நிலையை இன்னும் தென்னிலங்கை உணராமைக்கு காரணம் என்ன...?

யுத்தம் முடிவடைந்து 17 ஆண்டுகள் கடந்துள்ள போதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்படவில்லை. அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நல்லெண்ண முயற்சிகள் கூட முழுமனத்துடன் இடம்பெற்றவையாகத் தெரியவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அப்பால் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, காணி விடுவிப்பு எனத் தமிழ் மக்கள் முன் ஏராளம் பிரச்சினைகள் உள்ளன. சர்வதேச ரீதியில் ஏற்படும் நெருக்கடியை தணிப்பதற்கும், ஐ.நாவின் அழுத்தத்தை குறைப்பதற்காகவும் அவ்வப்போது ஒரு சில காணி விடுவிப்புக்களும், ஒரு சில கைதிகளின் விடுதலையும் இடம்பெற்றாலும் கூட அவை திருப்தியைத் தருவனவாக அமையவில்லை.

தற்போதைய அரசாங்கத் தரப்பு முதல் முறையாக ஆட்சிக்கு வந்துள்ளது. கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கடும் போக்குடன் செயற்பட்ட இந்த அணி தற்போது தேசிய மக்கள சக்தி என்ற புதிய முகமூடியுடன் தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்று ஆட்சிக்கு வந்துள்ளது. அந்த முகமூடியை நிரந்தரமாக அணிந்து மக்களது பிரச்சினைகளை இவர்கள் தீர்ப்பார்களா என்பதே தமிழ் மக்களின் கேள்வியாகும்.

ஆனால், கடந்த ஆட்சியாளர்களால் தமிழ் மக்களின் குடிசன பரம்பலை மாற்றியமைக்கும் முகமாக கிபவுல் ஓயா திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அது கிடப்பில் இருந்தது. வவுனியா வடக்கில் தமிழர் நிலங்களை கபளீகரம் செய்யும் வகையில் அடர்ந்த வனவளத்தை அழித்து அந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்த அரசாங்கம் பெருமளவு நிதியையும் ஒதுக்கியுள்ளது. இது குறித்து தமிழ் தரப்புக்ளுடனோ அல்லது சம்பந்தப்பட்ட பகுதி மக்களுடனோ எந்தவித பேச்சுக்களும் இடம்பெறவில்லை. முன்னைய நில அபகரிப்புக் குடியேற்றத் திட்டங்களை வலுப்படுத்துவது போன்று இத்திட்டம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக அண்மையில் நெடுங்கேணியில் மாபெரும் போராட்டம் ஒனறும் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஆக, கடந்த ஆட்சியாளர்கள் விட்ட அதே தவறை இந்த அரசாங்கமும் நீட்சியாக செய்ய முயல்கின்றதா என்ற எண்ணம் தமிழ் மக்கள் மத்தியில் எழாமல் இல்லை.

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்க அனைவரும் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டிய நிலையில் கூட தமது நாட்டில் வாழும் இன்னொரு தேசிய இனத்திற்கு தமக்கு இருப்பது போன்ற சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் கொடுப்பதற்கு இன்னமும் தென்னிலங்கை முன்வரவில்லை என்பது மிகவும் வேதனையான விடயம். இந்த நாட்டில் தேசிய இனப்பிரச்சினை தீர்கப்படாதவிடத்து இந்த நாடு இன்னும் பாதாளத்தை நோக்கியே செல்லும் என்பதை தென்னிலங்கை அரசியல்வாதிகள் உணரவேண்டும். கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தமே இந்த நாட்டின் பொருளாதாரப் பின்னடைவுக்கு முக்கிய காரணம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வு கண்டு அவ்வாறான சம்பவம் இந்த நாட்டில் மீள நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும். இதனை அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய புதிய அரசமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். அதன் மூலமே 79 ஆவது சுதந்திர தின்தை என்றாலும் எல்லோரும் ஒரு தாய் மக்களாக – ஒருவர் தோளில் ஒருவர் கைகோர்த்து – கொண்டாட முடியும். அதுவே இந்த நாட்டின் உண்மையான சுதந்திர தினமாகவும் அமையும்.

■



# சேர் நிஷான் கனகராஜா: பரி. யோவானில் இருந்து பங்கிங்ஹாம் வரை...!



ஜூட் பிரகாஷ்
(மெல்பேர்ண்)

அண்மையில் இங்கிலாந்தில் சேர் பட்டத் வழங்கி கௌரவிக்கப்பட்ட, யாழ்ப்பாணம் பரி. யோவன் கல்லூரியின் பழைய மாணவரான Sir நிஷான் கனகராஜாவை (குனெக்ஸ்) கௌரவிக்க, பரி. யோவான் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரவுணவோடு ஒன்றுகூடல் அண்மையில் மெல்பேர்ணில் நடந்தேறியது.

யாழ்ப்பாணத்தில் தனது கல்விப் பயணத்தை தொடங்கி, இன்று இங்கிலாந்தில் ஒரு பிரசித்தி பெற்ற லெஸ்டர் (Leicester) பல்கலைக்கழகத்தை வழிநடத்தும் நிலை வரை வளர்துள்ள அவரது வாழ்க்கைப் பயணம், கல்வியும் பாடத்திட்டத்துக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளும், (extra curricular activities) விளையாட்டும் ஒழுக்கமும் எங்கள் வாழ்க்கையை எவ்வாறு மாற்றக்கூடும் என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். யாழ்ப்பாணம், பரி. யோவான் கல்லூரியில் பயின்ற அவரது பள்ளிக் காலம், கல்வி, பாடத்திட்டத்துக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள் மற்றும் விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் அதிசிறப்பாக அமைந்தது.




1985 ஆம் ஆண்டு பரி. யோவான் கல்லூரியின் சிரேஷ்ட மாணவ தலைவராக (Senior Prefect) நிஷான் கனகராஜா நியமிக்கப்பட்டார். 203 ஆண்டுகள் பழமை வாய்ந்த பரி. யோவான் கல்லூரியின் அதிசிறந்த சிரேஜ்ட மாணவ தலைவராக கருதப்படும் நிஷான் கனகராஜா பற்றி இன்றும் கல்லூரி மாணவ தலைவர்களிற்குச் சொல்லப்பட்டு வருகிறது.

நிஷான் கனகராஜா தமிழ் மற்றும் ஆங்கில பேச்சுப் போட்டிகளில் தங்கப் பதக்கங்கள் பெற்ற ஒரு சிறந்த பேச்சாளர். விளையாட்டுத் துறையில், கல்லூரியின் உதைபந்நாட்ட அணித் தலைவராக இருந்தபோது, பரி. யோவான் அணி எந்தவொரு போட்டியிலும் தோல்வியடையாமல் இருந்ததோடு, பரி. யோவானிற்கு எதிராக எதிரணிகள் ஒரு கோலும் அடிக்கவும் முடியவில்லை. நிஷான் தலைமை தாங்கிய 1985 பலமான உதைபந்நாட்ட அணியே, 1986 இல் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளிற்கு இடையில் நடாத்தப்பட்ட பண்டிதர் கோப்பை சுற்றுப் போட்டியை பரி. யோவான் அணி வெல்வதற்கான அத்திவாரத்தை அமைத்துக் கொடுத்தது. பரி. யோவான் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட அணியின்ம் தலைவரகாவும் ஆடிய நிஷான் ஒரு சிறந்த ஓட்டப் பந்தய வீரரும் கூட.

கல்வி மற்றும் விளையாட்டுக்கு அப்பால், Interact Club, மாணவர் கிறிஸ்தவ இயக்கம், English Union, Tamil Union போன்ற அமைப்புகளில் தலைமைப் பொறுப்புகளையும் நிஷான் வகித்தார். உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற நிஷான், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் கற்கை நெறிக்கு தேர்வாகினார். அதே காலப்பகுதியில், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலுவதற்கான புலமைப் பரிசில் அவருக்கு கிடைத்தது. படிப்போடு மட்டும் நின்றுவிடாமல் பந்தடியிலும் பம்பலிலும் கலக்க வேண்டும் என்ற தாரக மந்திரத்ததில் தன் பிள்ளைகளை வளர்க்கும் பரி. யோவான் அன்னையின் முதன்மையான தங்கப் புதல்வன், சேர் நிஷான் கனகராஜா.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் கலாநிதி பட்டத்தைப் பூர்த்தி செய்துவிட்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் முதலில் விரிவுரையாளராகவும் பின்னர் பேராசிரியராகவும் நிஷான் கனகராஜா கடமையாற்றினார். இங்கிலாந்தில் பல முக்கிய கல்வி நிர்வாகப் பொறுப்புகளை வகித்த அவர், பின்னர் பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக தேர்வானார்.

அதன் பின்னர், லெஸ்டர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரும் தலைவருமாக பொறுப்பேற்று, அந்தப் பல்கலைக்கழகத்தை எதிர்காலத்தை நோக்கிய மறுசீரமைப்பு (strategic renewal), சமத்துவம் (inclusivity), டிஜிட்டல் முன்னேற்றம் (digital transformation) மற்றும் சமூகப் பொறுப்பு (social impact) ஆகியவற்றை மையமாகக் கொண்டு வழிநடத்தி வருகிறார்.

இங்கிலாந்தில் குடியேறிய குடும்பங்களைச் (immjgrants) சேர்ந்த இளைஞர்களையும், சிறுபான்மை சமூக மாணவர்களையும் உயர்கல்விக்கு ஊக்குவிப்பது, அவரது வாழ்நாள் முழுவதும் தொடரும் அர்ப்பணிப்பாக விளங்குகறது..

பேராசிரியர் நிஷான் கனகராஜாவிற்கு சேர் பட்டம் கிடைத்ததை கொண்டாடுவது என்பது கனெக்ஸின் தனிப்பட்ட சாதனையை கொண்டாடுவது மட்டுமல்ல் அறுபதுகளில் தொடங்கி தொண்ணூறுகளின் ஆரம்பம் வரை நீடித்த பரி. யோவான் கல்லூரியின் பொற்காலத்திற்கு கிடைத்த அதியுச்ச சான்றுபத்திரம் ஒன்றின் கொண்டாட்டமாகவும், கனெக்ஸிற்கு கிடைத்த சேர் பட்டம் கொண்டாடப்பட வேண்டும்.

“நாங்கள் எங்களைப் பற்றி, எங்கட சாதனைகள் பற்றி நாங்கள் எழுதக் கூடாது, ஐஸே” மெல்பேர்ணில் அன்றிரவு கனெக்ஸ் அண்ணரோடு தனிய கதைக்கும் போது, 1985 சிரேஷ்ட மாணவர் தலைவரின் (Senior Prefect) மிடுக்கான குரல் மீண்டும் வகுப்பெடுக்கத் தொடங்கியது. “அப்பத்தைய எங்கட காலத்தில் நடந்தது, நாங்கள் செய்தது எல்லாம் இப்பத்தைய தலைமுறைக்கு இற்கு ஒரு உத்வேகத்தை அளிப்பதாக இருக்க வேண்டும். அப்படியான விஷயங்களை தான் நாங்கள் எழுதோணும்” கனெக்ஸ் அண்ணாவின் குரலில் அன்று இருந்த கம்பீரம் இன்று இன்னும் மெருகேறியிருந்தது.

“எனக்கு சேர் பட்டம் கிடைத்த பிறகு நடக்கும் முதலாவது கௌரவிப்பு நிகழ்வு இந்த மெல்பேர்ண் நிகழ்வு தான்” என்று தனதுரையை தொடங்கிய சேர் கனெக்ஸ், “இப்படியான பட்டங்கள் ஒரு தனிநப

தொடர்ச்சி▼

# சேர் நிஷான் கனகராஜா: பரி. யோவானில் இருந்து பங்கிங்ஹாம் வரை...!



தொடர்ச்சி▲

ரிற்கு இற்கு கொடுக்கிறது உண்மையில் சரியில்லை இந்த சாதனையின் பின்னால் ஒரு குழுவே உள்ளது." என்றார்.

"நம் வாழ்க்கையின் ஆரம்ப காலங்கள் அடிப்படையாகவே மிகவும் முக்கியமானவை. அவை நமது குணத்தை வடிவமைக்கின்றன, நமது மதிப்புகளை (values) உருவாக்குகின்றன, நாம் வளர்ந்து பெரியவர்களானபோது எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் எம் வாழ்வின் ஆரம்ப காலங்களே தீர்மானிக்கின்றன" என்று கூறி வாழ்வில் சாதித்த பல பரி. யோவான் கல்லூரியின் மாணவர்களில் இருக்கும் முக்கியமான ஒற்றுமை அவர்களின் பள்ளிக்காலங்கள்தான் என்றார்.

படிப்பு முக்கியம், படிப்போடு பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளும் (extra curricular activities) அவசியம், ஒழுங்கமைப்பு திறன்களும் தலைமைத்துவ பண்புகளும் ஒழுக்க விழுமியங்களும் சிறிய வயதில் இருந்தே கல்லூரி கற்றுத் தந்தது என்றும், அவை தனக்கு இன்றும் வாழ்க்கையில் உறுதுணையாக இருக்கின்றன என்று பரி. யோவான் கல்லூரித் தாயை நன்றியோடு கனெக்ஸ் நினைவு கூர்ந்தார்.

அண்மையில் Jaffna Monitor இதழிற்கு அளித்த செவ்வியில் கூறிய "கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள் (grab the opportunity)" என்ற தனது வாழ்வின் தாரக மந்திரத்திற்கு சான்றாக தனது வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தையும் கனெக்ஸ் தனதுரையில் பகிர்ந்து கொண்டார்.

"நான் ஒரு பேராசிரியராக , என்னுடைய ஆய்வும் கற்பித்தலும் தான் என் வாழ்க்கை என்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருந்தேன். தலைமைப் பொறுப்பில் நான் வருவேன் என்று ஒருபோதும் நினைக்கவில்லை. அந்த வாய்ப்பு எதிர்பாராத விதமாக ஒரு கிறிஸ்மஸ் விருந்தில் வாய்த்தது; அப்போது என் பெயர் ஒரு முக்கியமான பொறுப்பிற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக ஒரு சக பேராசிரியர் ஒருவர் எனக்குச் சொன்னார். அந்தப் பொறுப்பு ஒரு மிகப் பெரிய சவால் என்பதை அறிந்திருந்ததால் நான் தயங்கினேன், அந்த பதவியில் இருந்தவர் கூட அந்த பொறுப்பு அதிக அழுத்தம் நிறைந்தது என்ற காரணத்தால் பதவி விலகியிருந்தார்.

நான் அந்த பொறுப்பை பொறுப்பேற்ற போது பலர் நான் தோல்வியடைவேன் என்று நினைத்தனர். ஆனால் நான் முயற்சி செய்ய முடிவு செய்தேன். பல நேரங்களில் முயற்சியை கைவிட வேண்டும் என்று தோன்றினாலும், தொடர்ந்து முயன்றேன். அந்த முடிவும், அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டதும்தான் என்னை இன்று இந்த நிலைக்கு கொண்டு வந்தது. பல நேரங்களில், நாம் நம்மை விட மற்றவர்கள் நம் மீது வைத்துள்ள நம்பிக்கையிலிருந்தே வாய்ப்புகள் உருவாகின்றன என்பதையே இது எனக்கு கற்றுக் கொடுத்தது" என்றார் ஞசை கனெக்ஸ்.

இறுதியாக "இந்த அங்கீகாரம் (knighthood) என்னை மாற்றவில்லை நான் இன்றும் அதே ஆள் தான். ஆனால், என்னை மற்றவர்கள் பார்ப்பதுதான் மாறியிருக்கிறது, அதற்கேற்ப மாற நான் என்னை நானே பழக்கிக் கொண்டிருக்கிறேன். Sir பட்டம் நான் திட்டமிட்டதோ, ஆசைப்பட்டதோ அல்ல. ஆனால், இதன் மூலம் மற்றவர்களுக்கும் 'ஒருநாள் நானும் இதைப் போன்ற ஒன்றைச் செய்ய முடியும்' என்ற நம்பிக்கை வரலாம், அதற்காகவே நான் இதை ஏற்றுக்கொண்டேன். யாரோ ஒருவருக்காவது இது ஊக்கமாக அமைந்தால் அதுவே எனக்கு போதும். இது என் வெற்றி மட்டுமல்ல இது நம்முடைய அனைவரின் வெற்றி. நாம் அனைவரும் சேர்ந்து இதை மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்று கனெக்ஸ் அண்ணா தனதுரையை நிறைவு செய்தார்.

எண்பதுகளின் யுத்தச் சூழலில், குண்டு வெடிப்புகளின் சத்தங்களின் மத்தியில், வாழ்வின் கனவுகளைச் சுமந்து கொண்டு, இடம்பெயர்வுகளின் வலியோடு வளர்ந்த நாங்கள், இன்று உலகின் பல மூலைகளில் கல்வி, அறிவியல், மருத்துவம், நிர்வாகம், அரசியல், வணிகம் என பல துறைகளில் முன்னணியில் திகழ்கிறோம். இது தற்செயலாக நாங்கள் அடைந்த வெற்றி அல்ல் இது நாங்கள் தன்மானத்தோடு உயிர் வாழ்வதற்கும் எங்கள் உரிமைகளிற்குமான போராட்டத்திலிருந்து உருவான மனவலிமையின் விளைவுகள், அறுவடைகள்.

எங்கள் திறமைகளையும் ஆற்றல்களையும் தக்கவைத்துக் கொள்ளவும், வளர்த்தெடுக்கவும், பயன்படுத்திக்கொள்ளவும் தவறிய ஒரு நாட்டில் நாங்கள் பிறந்தோம் என்ற துயரமான உண்மையையும் நாங்கள் மறக்க கூடாது, மறைக்கவும் முடியாது. சிங்கப்பூர் தேசத்தை கட்டியெழுப்பியது யாழ்ப்பாணத்தின் மூளைகள் என்பார்கள் ஆனால் சிறுலங்கா நாடு எங்கள் உரிமைகளைப் பறித்தெடுத்து, இனக் கலவரங்களை அரங்கேற்றி, எங்கள் நூலகத்தையும் வீடுகளையும் எரித்து நாசமாக்கி, எங்களை நாட்டை விட்டு துரத்தியது வரலாற்றின் கசப்பான உண்மையாகும். நாம் பிறந்த நாடு நம்மை தக்கவைத்துக் கொள்ளவில்லை ஆனால் உலகமே இன்று நம்மை தத்தெடுத்துக் கொண்டுள்ளது.

"ஒரே ஒரு தலைமுறைக்குள், தமிழர்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருந்த நிலையிலிருந்து வெற்றியாளர்களாக மாறியுள்ளனர் (victims to victors)." என்று ரோய் ரட்னவேல் தனது "Prisoner #1056" புத்தகத்தில் கூறியது போல, சேர் நிஷான் கனகராஜாவின் வெற்றி எங்கள் சமூகத்தின் வெற்றிக் கதை் சேர் கனெக்ஸ் போன்றவர்கள் நாங்கள் ஒரு சமூகமாக அடைந்த வெற்றியின் உயிருள்ள சான்றுகள்.

பங்கருக்குள் கனவுகளைப் பாதுகாத்த ஒரு தலைமுறை, இன்று உலக மேடைகளில் தலைமை வகிக்கிறது என்றால், அது ஒரு தனிநபரின் வெற்றி மட்டுமல்ல் அது ஒரு இனத்தின் மனவலிமையின் வெற்றி. அண்மையில் மெல்பேர்ணில் நாம் கொண்டாடியது ஒரு பட்டத்தையோ, ஒரு பதவியையோ அல்ல் ஒரு தலைமுறையின் மீளெழுச்சியையும், ஒரு சமூகத்தின் தன்னம்பிக்கையையும், எங்கள் எதிர்காலத்திற்கான நம்பிக்கையையும் தான்.




ICC MEN'S T20 WORLD CUP INDIA & SRI LANKA 2026

ரி-20 உலகக் கிண்ணம்-2026

# இந்தியாவுடன் ஆட பாகிஸ்தான் சம்மதம்

'ரி-20' உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் விளையாடும் என அறிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியாவில் 20 அணிகள் பங்கேற்கும் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடந்து வருகின்றது.

இதில் பங்கேற்க இயலாது என பங்களாதேஷ் அறிவித்தது. இதனால் பங்களாதேஷ் அணி உலகக் கிண்ணத் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டு, ஸ்கொட்லாந்து அணிக்கு ரி-20 உலகக் கிண்ணத்தில் விளையாட வாய்ப்பு வழங்கப்பட்டது.

இந்நிலையில் பங்களாதேஷ் அணிக்கு ஆதரவு தெரிவித்து பாகிஸ்தான் அணியும் ரி-20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து விலக உள்ளது எனத் தகவல் வெளியானது.

எனினும், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாட பாகிஸ்தான் அரசாங்கம் ஒப்புதல் அளித்தது.

ஆனால், பெப்ரவரி 15ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் இந்தியாவுக்கு எதிராக நடைபெறவிருக்கும் போட்டியில் பாகிஸ்தான் அணி பங்கேற்காது என்று பாகிஸ்தான் அறிவித்தது.

இதையடுத்து சர்வதேச கிரிக்கெட் சபை பாகிஸ்தான் கிரிக்கெட் மற்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் தரப்புகளிடையே பேச்சுகள் நடைபெற்றது.

இதன் விளைவாக பாகிஸ்தான் அணி ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இந்தியாவுடனான போட்டி உட்பட அனைத்துப் போட்டிகளிலும் பங்கேற்கும் முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 15ஆம் திகதி பாகிஸ்தான் – இந்திய அணிகளுக்கிடையிலான போட்டி திட்டமிட்டபடி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரி-20: நேற்றைய போட்டிகளின் முடிவுகள்

**ஸ்கொட்லாந்து - இத்தாலி**
207/4 134
73 ஓட்டங்களால் ஸ்கொட்லாந்து வெற்றி

**ஓமான் - சிம்பாப்வே**
103 106/2
8 விக்கெட்டுகளால் சிம்பாப்வே வெற்றி

**தெ.ஆபிரிக்கா - கனடா**
213/4 156/8
57 ஓட்டங்களால் தெ.ஆபிரிக்கா வெற்றி

## ரி-20 உலகக் கிண்ணம்: அணிகளின் நிலை - 09.02.2026

**குழு ஏ - அணிகளின் நிலைவரம்**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 1.450 |
| 2 | பாகிஸ்தான் | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 0.240 |
| 3 | நெதர்லாந்து | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -0.240 |
| 4 | ஐ.அமெரிக்கா | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -1.450 |
| 5 | நமீபியா | - | - | - | - | - | - | - |

**குழு பி - அணிகளின் நிலைவரம்**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சிம்பாப்வே | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 2.702 |
| 2 | இலங்கை | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 1.000 |
| 3 | அயர்லாந்து | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -1.000 |
| 4 | ஓமன் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -2.702 |
| 5 | ஆஸ்திரேலியா | - | - | - | - | - | - | - |

**குழு சி - அணிகளின் நிலைவரம்**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மே.இ.தீவுகள் | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 1.750 |
| 2 | ஸ்கொட்லாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 0.950 |
| 3 | இங்கிலாந்து | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 0.200 |
| 4 | நேபாளம் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -0.200 |
| 5 | இத்தாலி | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -3.650 |

**குழு டி - அணிகளின் நிலைவரம்**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தென்னாபிரிக்கா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 2.850 |
| 2 | நியூசிலாந்து | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 1.162 |
| 3 | ஆப்கானிஸ்தான் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -1.62 |
| 4 | கனடா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | -2.850 |
| 5 | ஐ.அ.இராச்சியம் | - | - | - | - | - | - | - |

போ-போட்டி, வெ-வெற்றி, தோ-தோல்வி, ச-சமனிலை மு.அ.-முடிவு அற்றது, பு-புள்ளி, ஓ.ச.-ஓட்ட சராசரி



# கொக்கோ, மிளகு, ஏலக்காய் செய்கையாளர்களுக்கு 1,920 ரூபா நாளாந்த கொடுப்பனவு வழங்க தீர்மானம்

கொக்கோ, மிளகு மற்றும் ஏலக்காய் செய்கையாளர்களுக்கு 1,920 ரூபா 58 சதம் நாளாந்த கொடுப்பனவை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி தொழில் ஆணையாளர் நாயகம் எச்.எம்.டீ.என்.கே.வடயலித்த வின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனவரி மாதத்திற்கான வாழ்க்கை செலவு தொடர்பில் ஆராய்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மிளகு, கோப்பி மற்றும் ஏலக்காய் பயிர்ச்செய்கைளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டுள்ள மிளகு, கோப்பி மற்றும் ஏலக்காய் பயிர்ச்செய்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக ஒரு ஹெக்டேயருக்கு 425,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

# டித்வா சூறாவளி அனர்த்தம் காரணமாக பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு

டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்த மற்றுமொருவரின் மரணம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, டித்வா சூறாவளியால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 650 ஆக பதிவாகியுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.







# இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் புதிய வதிவிடப் பணிப்பாளர் பெறுப்பேற்றார்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான புதிய வதிவிடப் பணிப்பாளராக ஷனொன் கௌலின் நேற்று கொழும்பில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இலங்கையின் நீண்டகால மற்றும் நம்பிக்கைக்குரிய பங்காளியாகத் திகழும் ஆசிய அபிவிருத்தி வங்கி, கொவிட் 19 பெருந்தொற்று மற்றும் சமீபத்திய பொருளாதார நெருக்கடிகளின் போது நாட்டுக்கு வழங்கிய ஆதரவை கௌலின் தனது உரையில் நினைவு கூர்ந்தார்.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீரமைப்பதற்கும், நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பி அதன் நெகிழ்ச்சித் தன்மையை வலுப்படுத்துவதற்கும் தாம் அரசாங்கத்துடனும் அபிவிருத்திப் பங்காளர்களுடனும் இணைந்து நெருக்கமாகப் பணியாற்றப் போவதாக அவர் உறுதியளித்தார்.

ஷனொன் கௌலின் சுமார் 26 ஆண்டுகளுக்கும் மேலான சர்வதேச தொழில்முறை அனுபவம் கொண்டவர். இதில் 13 ஆண்டுகள் ஆசிய அபிவிருத்தி வங்கியில் பல்வேறு முக்கிய பொறுப்புகளை அவர் வகித்துள்ளார்.

இலங்கைக்கு வருவதற்கு முன்னர், 2023 ஆம் ஆண்டு முதல் மங்கோலியாவிற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பணிப்பாளராகப் பணியாற்றி அந்த நாட்டின் மூலோபாய நடவடிக்கைகளை வழிநடத்தினார்.

# 5 தொன் பேரீச்சம்பழம் நன்கொடை; குவைத் தூதரகத்தின் விசேட திட்டம்

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள, புனித ரமழான் பண்டிகைக்கான நோன்பு காலத்தை முன்னிட்டு குவைத் அரசு 25 தொன் பேரீச்சம்பழங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

கொழும்பில் உள்ள குவைத் தூதரகம், புனித ரமழான் திட்டத்தின் கீழ், 16 முஸ்லிம் அமைப்புகளுக்கு இந்த பேரீச்சம்பழங்களை விநியோகித்துள்ளது.

அதன்படி, குவைத் மற்றும் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட 16 முஸ்லிம் தொண்டு நிறுவனங்கள் ஊடாக பேரீச்சம்பழங்கள் விநியோகிக்கப்பட உள்ளன.

குவைத் நன்கொடையாளர்கள் இலங்கைக்கு வருகை தந்து பேரீச்சம்பழங்களை வழங்கியுள்ளனர்.









# பாடசாலை மாணவர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு புதிய சட்டம்

இலங்கையில் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துச் சேவைகளை முறைப்படுத்தவும், மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் புதிய சட்டதிட்டங்களைக் கொண்டு வருவது குறித்து பிரதமர் அலுவலகத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

பிரதமர் ஹரினி அமரசூரிய தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பி.ஏ. சந்திரபால மற்றும் கல்வி அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கான வரைவு ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ள நிலையில், அதில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திருத்தங்கள் குறித்து இதன்போது விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு ஏற்ப, “சிசு சரிய” பாடசாலைப் பேருந்து சேவையை முன்னரை விட அதிக வினைத்திறனுடனும், பயனுள்ள முறையிலும் நாடு முழுவதும் விரிவுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் சேவைகளின் போது மாணவர்கள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களைத் தடுக்க முன்னுரிமை அளிக்கப்படும். மாணவர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் கடுமையான சட்டதிட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

பாடசாலை வாகன ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களின் தொழில்முறைத் தரத்தை உயர்த்துவதன் மூலம், அவர்கள் பொறுப்புடனும் பொறுப்புக்கூறலுடனும் செயல்படுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த போக்குவரத்து அமைச்சு, கல்வி அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகிய நிறுவனங்கள் இணைந்து ஒருங்கிணைந்த முறையில் செயல்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார்.

அதேநேரம், புதிய கல்விச் சீர்திருத்தச் செயல்பாட்டின் ஒரு பகுதியாக, மாணவர்களின் போக்குவரத்துத் தேவைகளை எவ்வித தடையுமின்றி பூர்த்தி செய்வதே இந்த ஆலோசனைக் கூட்டத்தின் முக்கிய நோக்கமாக அமைந்தது.













# சீஷெல்ஸ் ஜனாதிபதியுடன் இந்திய பிரதமர் சந்திப்பு!

டில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் மோடியை சீஷெல்ஸ் ஜனாதிபதி பேட்ரிக் ஹெர்மினி சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தியாவுக்கு 5 நாள் பயணமாக வந்த சீஷெல்ஸ் ஜனாதிபதி பேட்ரிக் ஹெர்மினி, கடந்த பெப்ரவரி 5ஆம் திகதி சென்னை வந்தடைந்தார்.

இந்த நிலையில் தொடர்ந்து சென்னை மற்றும் மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்று பின்னர் நேற்று முன்தினம் டில்லிக்கு சென்றுள்ளார்.

நேற்று காலை மகாத்மா காந்தி நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தியதுடன் பின்னர் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இந்தியாவின் மகாசாகர் திட்டத்திற்கு ஆதரவு அளித்து வருவதற்காக சீஷெல்ஸ் ஜனாதிபதி ஹெர்மினிக்கு பாராட்டு தெரிவித்தார்.

இந்த நிலையில், நேற்று டில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் மோடியை சீஷெல்ஸ் ஜனாதிபதி பேட்ரிக் ஹெர்மினி சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது சர்வதேச பிரச்னைகள், இருநாட்டு உறவுகள் ஆலோசிக்கப்பட்டதுடான் தொடர்ந்து, இருநாடுகளுக்கு இடையே முக்கிய துறைகளில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டமை தெரிவிக்கப்படுகிறது.

# விவசாயிகள் நடத்தும் நாடு தழுவிய போராட்டத்துக்கு த.வா.க ஆதரவு



விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்க எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறும் விவசாயிகளின் நாடு தழுவிய போராட்டத்தை முழுமனதோடு ஆதரிக்கிறோம் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி.வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை,

“மத்தியில் மோடி தலைமையிலான அரசு 2014 ஆம் ஆண்டு பொறுப்பேற்றது முதல், இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்கள், இயற்கை வளங்கள் மற்றும் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரமான விவசாயம் என அனைத்தையும் அந்நிய நாடுகளுக்கும், பெரு நிறுவனங்களுக்கும் திட்டமிட்டுத் தாரைவார்க்கும் தேச விரோத செயலில் ஈடுபடுகிறது.

“மேக் இன் இந்தியா“ எனப் பொய் முழக்கமிட்டுக் கொண்டே, கடந்த 12 ஆண்டுகளாக நாட்டின் நிலக்கரி, மின்சாரம், ரயில்வே உள்ளிட்ட முக்கியத் துறைகளை தனியார் மயமாக்கி சீரழித்தது. இப்போது இந்திய விவசாயத்தின் மரணச் சாசனமாக அமெரிக்காவுடன் இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

டில்லி எல்லையில் ஓராண்டு காலம் கடும் குளிரிலும் மழையிலும், நூற்றுக்கணக்கான உயிரிழப்புகளோடு போராடிய விவசாயிகளுக்கு கொடுத்த எந்த வாக்குறுதியையும் மத்திய அரசு நிறைவேற்றவில்லை. ஆனால், அமெரிக்க ஜனாதிபதியின் வர்த்தக நலன்களுக்காக இந்திய உழவர்களைப் பலிகொடுக்கத் துணிந்திருப்பது வன்மையான கண்டனத்துக்குரியது.

ஒட்டுமொத்த 140 கோடி மக்களும், இந்தியப் பெருநிலமும், அந்நிய நிறுவனங்களின் வேட்டைக்காடாக மாறி வருவதையும், நம் நாட்டின் வளங்கள் ஒவ்வொன்றாக ஏலம் விடப்படுவதையும் நாங்கள் ஒருபோதும் வேடிக்கைப் பார்க்கமாட்டோம்.

மண்ணின் மைந்தர்களின் உரிமைகளை மீட்கவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்கவும் பெப்ரவரி 12 இல் நடைபெறும் விவசாயிகளின் நாடு தழுவிய போராட்டத்தை முழுமனதோடு ஆதரிக்கிறோம்.” என்று தெரிவித்துள்ளார்.

# டில்லி முழுவதும் உள்ள பல முக்கிய பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்



டில்லி முழுவதும் உள்ள பல முக்கிய பாடசாலைகளை குறிவைத்து வெடிகுண்டு மிரட்டல்கள் நேற்று அவசரகால நடவடிக்கைகளைத் தூண்டின.

இது இந்தியாவின் முக்கிய நகரங்களில் கல்வி நிறுவனங்களை மீண்டும் மீண்டும் சீர்குலைத்துள்ள நடவடிக்கையின் அண்மைய சம்பவமாகும்.

நேற்று திங்கள் கிழமை காலை 8:30 மணி முதல் காலை 9:00 மணி வரை குறைந்தது 9 பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் மின்னஞ்சல்கள் வந்தன என கூறப்படுகிறது.

டில்லி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, தீயணைப்பு படையினரும், வெடிகுண்டு அகற்றும் படையினரும் உடனடியாக மேற்படி பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் உடனடியாக வளாகத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

தற்போது தேடுதல் வேட்டை நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெருநகரங்களில் அதிகரித்து வரும் வாடிக்கையான வெடிகுண்டு மிரட்டல்களுக்கு மத்தியில் இது வந்துள்ளது, இது அவசர சேவைகளை விரிவுபடுத்தி பெற்றோர்கள் மற்றும் பள்ளி நிர்வாகிகளிடையே பரவலான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக, ஜனவரி 29 ஆம் திகதி காலை தேசிய தலைநகரில் உள்ள 05 பாடசாலைகளுக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல்கள் அனுப்பப்பட்டன.

பாதுகாப்பு நிறுவனங்களின் தீவிர சோதனைகளைத் தொடர்ந்து அந்த மிரட்டல்கள் பின்னர் போய் என அறிவிக்கப்பட்டன.

அதற்கு ஒரு நாள் முன்பு, ஜனவரி 28 அன்று, துவாரகா நீதிமன்ற வளாகத்திற்கும் வெடிகுண்டு மிரட்டல் வந்தது, அது பின்னர் புரளி என்று கண்டறியப்பட்டது.

மீண்டும் மீண்டும் மிரட்டல்களின் மூலத்தைக் கண்டறிய விசாரணைகள் நடந்து வருவதாகவும்புரளிகளுக்குப் பொறுப்பானவர்கள் கடுமையான நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும் என்றும் டில்லி காவல்துறை அதிகாரிகள் முன்பு தெரிவித்தனர்.

## எப்ஸ்டீன் ஆவண விவகாரம்:

# பிரித்தானிய ஆளும் கட்சிக்குள் பிளவு; பதவி விலகுமாறு பகிரங்க அழைப்பு






பிரித்தானியாவில் நிலவி வரும் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில், பிரதமர் சர் கெய்ர் ஸ்டார்மர் தனது பதவிகளிலிருந்து விலக வேண்டும் என்று ஸ்கொட்லாந்து தொழிற் கட்சியின் தலைவர் அனஸ் சர்வார் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

இது அந்நாட்டின் ஆளும் கட்சிக்குள் பெரும் பிளவை வெளிப்படுத்தியுள்ளது.

டவுனிங் ஸ்ட்ரீட் (பிரதமர் அலுவலகம்) தலைமையில் மாற்றம் ஏற்படுவது அவசியம் என்று வலியுறுத்தியுள்ள அனஸ் சர்வார், ஸ்கொட்லாந்தின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானத்தை எடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், “இந்த முடிவை எடுப்பது எனக்கு எளிதானதல்ல, இது மிகுந்த மன வேதனையைத் தருகிறது. இருப்பினும், எனது வாக்காளர்களுக்கு நான் செய்ய வேண்டிய கடமையே முதன்மையானது,” என்று அவர் உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியத் தலைமையின் தோல்விகள் ஸ்கொட்லாந்தின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்றும், தற்போதைய தலைமை வெற்றியை நோக்கிய பயணத்திற்குத் தடையாக இருப்பதாகவும் சர்வார் குற்றம் சாட்டியுள்ளார்.

ஸ்டார்மர் ஒரு நல்ல மனிதர் என்பதையும், பொதுச் சேவையில் அர்ப்பணிப்புடன் செயல்படுபவர் என்பதையும் ஒப்புக் கொண்ட சர்வார், ஆனால் தற்போதைய சூழலில் தலைமை மாற்றம் தவிர்க்க முடியாதது எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

உலகையே உலுக்கிய எப்ஸ்டீன் ஆவணங்களில், லேபர் கட்சியைச் சேர்ந்த பீற்றர் மாண்டல்சனின் பெயர் இடம்பெற்றுள்ளமை இந்த விவகாரத்தை மேலும் சூடாக்கியுள்ளது. மாண்டல்சனை அமெரிக்காவுக்கான பிரித்தானியத் தூதராக ஸ்டார்மர் நியமித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

எப்ஸ்டீனிடம் பிரித்தானிய அரசு தொடர்பான இரகசியத் தகவல்களை மாண்டல்சன் மின்னஞ்சல்கள் ஊடாகப் பகிர்ந்து கொண்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என வெளியாகி வரும் தகவல்கள், ஸ்டார்மர் அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.



# லெபனானில் குடியிருப்பு கட்டடங்கள் இடிந்து வீழ்ந்து விபத்து: 15 பேர் பலி

லெபனானின் இரண்டாவது பெரிய நகரமான திரிப்போலியில் உள்ள பாப் அல்-தப்பானே பகுதியில் இரண்டு குடியிருப்பு கட்டடங்கள் இடிந்து வீழ்ந்ததில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது.

அந்நாட்டின் சிவில் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் இமாத் கிரைஸ் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், மீட்புக் குழுவினர் இடிபாடுகளுக்குள் இருந்து 14 சடலங்களை மீட்டுள்ளன எனவும் 8 பேரை உயிருடன் காப்பாற்றப்பட்டனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இடிந்து வீழ்ந்த அடுத்தடுத்த இரண்டு கட்டடங்களிலும் மொத்தம் 22 குடியிருப்பாளர்கள் வசித்து வந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இன்னும் எத்தனை பேர் காணாமல் போயுள்ளனர் என்பதை தம்மால் உறுதிப்படுத்த முடியாதுள்ளதாக திரிப்போலி மாநகரசபை முதல்வர் அப்தெல் ஹமிட் கராமே தெரிவித்துள்ளார்.

திரிப்போலி நகரில் அண்மைக்காலமாக பல குடியிருப்பு கட்டடங்கள் இவ்வாறு சரிந்து விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல ஆண்டுகளாகத் தொடரும் அலட்சியம் மற்றும் உட்கட்டமைப்புகளின் தரம் சீர்குலைந்துள்ளமையே இத்தகைய விபத்துகளுக்கு முக்கியக் காரணம் என மாநகரசபை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக, முறையாகப் பராமரிக்கப்படாத மிகவும் பழமையான கட்டடங்களே இவ்வாறான ஆபத்தான நிலையை எதிர்நோக்கியுள்ளன.









# இன்றைய ராசி பலன்கள் - 10.02.2025




தியானம் அல்லது பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். இன்று வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும் முக்கிய முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் பணிக்கான பாராட்டு கிடைக்கும். இது உங்கள் மனதில் மகிழ்ச்சியை அதிகரிக்க உதவும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சொத்துக்கள் அதிகரிக்கும். முக்கிய முதலீடுகளில் இன்று பணத்தை சேமிக்கலாம்.

இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். தைரியம் மற்றும் உறுதி வெற்றிக்கு வழி வகுக்கும்.

இன்று பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். நீங்கள் விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

நீங்கள் இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.




இன்று பதற்றமும் கவலையும் காணப்படும். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி செயலாற்றுவது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படலாம். சிறப்பாக திட்டமிட்டு மிகச் சரியாக பணிகளை ஆற்ற வேண்டும்.

உங்களின் சில கருத்துக்களை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ள இன்றைய நாள் உகந்ததல்ல. உரையாடும் போது கவனம் தேவை.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. என்றாலும் அதிகமாக சேமிக்க இயலாது.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். அதிக நீரைப் பருகவும்.




இன்று இழப்புகள்நேரா வண்ணம் கவனித்து செயலாற்ற வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் இறக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் துல்லியமாக முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு வன்மையாக நடந்து கொள்வீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க அதனை தவிர்த்தல் நல்லது.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக பணம் அதிக அளவில் செலவாகும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

வயிறு உப்பசம் காரணமாக சில பிரச்சினைகள் ஏற்படும்.




இன்று ஓய்வில்லாமல் உழைப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று பயனுள்ள முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தரும்.

வெளியிடங்களுக்கு சென்று இருவரும் இணைந்து மகிழ்ச்சியுடன் இன்றைய நாளைக் கழிப்பீர்கள். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் எதிர்காலத்திற்காக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று சம்பவங்கள் உங்களுக்கு சாதகமாக அமைய உங்கள் செயல்களை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.முக்கியமான முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளி வைக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக இருக்கும் காரணத்தால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இன்று மிகுந்த எச்சரிக்கையும் சிறந்த திட்டமிடலும் தேவை.

இன்று அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வதை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொண்டால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். எனவே தேவையற்ற செலவுகளை குறைத்துக் கொள்வது அவசியம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சில ஏமாற்றங்களை சந்திக்க நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அடுத்தவர் தரும் வாக்குறுதியை நம்பாமல் உங்கள் கடின உழைப்பை நம்பி செயலாற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடச் சூழல் இன்று மகிழ்சிகரமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும்.

இன்று சில பண வரவுகள் காணப்பட்டாலும் செலவுகளை சமாளிப்பது கடினமாக இருக்கும். உங்கள் பணத்தை சிறந்த முறையில் செலவு செய்யவும்.

உடல் உழைப்பு காரணமாக கால்களில் வலி ஏற்படலாம். முறையான உடற்பயிற்சியும் தியானமும் சிறந்தது.




ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன்களை அளிக்கும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் காணப்படும். உரையாடும் போது கவனம் தேவை.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகளை சந்திக்க நேரும்.

பரபரப்பான பணிகள் காரணமாக தலைவலி அல்லது கால் வலி ஏற்படலாம். யோகா மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.02.2025




இன்று உறுதியாக நற்பலனகள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறக் காண்பீர்கள்.

உங்கள் பணியில் வளர்ச்சியைக் காண்பீர்கள். சக பணியாளர்கள் ஆதர வாக இருப்பார்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படும்.

பூர்வீகச் சொத்து வகையில் இன்று வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களை மேற்கொள்வ தில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் செலுத்துவது சிறந்தது.




இன்று தடைகளையும் கஷ்டங் களையும் சமாளிக்க வேண்டியிருக் கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன் றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.




உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வ- தில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். உங்கள் பணி களை திறமையாக ஆற்ற நீங்கள் திட்டமிட வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணை யுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.இருவரும் மனம் திறந்து பேசிக்கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை காணப்படும் அவர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

# தனியார் கல்வி நிறுவனங்களுக்கு காத்தான்குடியில் கட்டுப்பாடுகள்!

## நகர முதல்வருடனான கலந்துரையாடலில் முக்கிய தீர்மானங்கள்





(நூருல் ஹுதா உமர்)

காத்தான்குடி நகர சபை எல்லைக் குள் இயங்கி வரும் தனியார் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள், நேற்று காத்தான்குடி நகர முதல்வர் எஸ்.எச். எம்.அஸ்பரைச் சந்தித்து கலந்துரை யாடினர்.

மாணவர்களின் நலன், சமூக ஒழுங்கு மற்றும் மதச் சூழலைக் கருத்தில் கொண்டு நடைபெற்ற இக் கலந்துரையாடலின் போது, தனியார் கல்வி நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் நோக்கில் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதன்படி, அனைத்து தனியார் வகுப்புகளும் மாலை 6.30 மணி யுடன் கட்டாயமாக நிறைவு செய்யப்பட வேண்டும். பிரதி வெள்ளிக்கிழமைகளில் தனியார் வகுப்புகள் நடத்த முழுமையா கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எதிர் வரும் ரமழான் மாதத்தில், தனியார் வகுப்புகள் காலை 7.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை மட்டுமே நடத்த அனுமதி வழங்கப்படும். நோன்புப் பெருநாளை முன்னிட்டு 13.03.2026 முதல் 29.03.2026 வரை அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

இந்தத் தீர்மானங்களை காத்தான்குடி நகர சபை எல்லைக்குள் இயங்கி வரும் அனைத்து தனியார் கல்வி நிறுவனங் களும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும் என நகர சபை அறிவித்துள்ளது. இத் தீர்மானங்களை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.